# தினபூமி

thinaboomi.com

பூமி: 22 சுற்று: 17 மார்கழி 29

RNI Regn. No. 61494/94

வேலூர், செவ்வாய், ஜனவரி 13, 2026

▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி

பக்கம் 8 ₹ 3.00




**யாரும் ஆணையிட முடியாது: அதிபர் ட்ரம்பின் மிரட்டலுக்கு கியூபா அதிபர் மிகுவெல் பதில்**


....2-ம் பக்கம்

**மத்திய அரசை கண்டித்து கேரளா முதல்வர் பினராயி சத்தியாக்கிரக போராட்டம்**

...3-ம் பக்கம்

**அதிவேகமாக 28 ஆயிரம் ரன்: சச்சின், சங்ககாரா சாதனையை முறியடித்தார் விராட் கோலி..!**

....6-ம் பக்கம்






● முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற அயலகத் தமிழர் தினம் 2026 விழாவில் கலந்துகொண்டு உரையாற்றினார். இவ்விழாவில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர் உள்ளிட்ட அமைச்சர்கள், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் முருகானந்தம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## மொழியும், இனமும்தான் நம்மை இணைக்கும்:

# நமக்குள் எந்த பிளவுகளும் ஏற்பட அனுமதிக்காதீர்கள்

### அயலகத் தமிழர் தின விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு

சென்னை, ஜன. 13-

**மொழியும், இனமும்தான் நம்மை இணைக்கும் என்றும் நமக்குள் எந்த பிளவுகளும் ஏற்பட அனுமதிக்காதீர்கள் என்றும் அயலகத் தமிழர் தின விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். மேலும் மொழி உரிமைக்காக தனது உயிரைத் தியாகம் செய்தது தி.மு.க. என்றும் அவர் பெருமிதம் தெரிவித்தார்.**

**மொழி உரிமைக்காக...**

சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் நடைபெற்ற அயலகத் தமிழர் தினம் - 2026 விழாவில், முதல்வர் மு. க. ஸ்டாலின் பங்கேற்று, அயலகத் தமிழர்களுக்கான விருதுகளை வழங்கினார். இதனைத் தொடர்ந்து அவர் பேசுகையில், "தமிழர்கள் கனவு கண்டால், அதை நாம் அடைந்தே தீருவோம். மொழி உரிமைக்காக தனது உயிரைத் தியாகம் செய்தது தி.மு.க., நமக்குள் எந்த பிளவுகளும் ஏற்பட அனுமதிக்காதீர்கள். ஒரு தாய் மக்களாய் வாழ்வோம்.

**யாராலும் பிரிக்க....**

உலகின் பல்வேறு நாடுகளில் தமிழர்களாகிய நீங்களும், உங்கள் குடும்பத்தார்களும் பல்வேறு முக்கிய பொறுப்புகளில் இருப்பதை நினைத்து நான் பெருமைப்படுகிறேன். நாம் அனைவரும், யாராலும் பிரிக்க முடியாத தமிழின சொந்தங்கள். நாடுகளும் கடல்களும் நம்மை பிரித்தாலும், மொழியும் இனமும் நம்மை உணர்வால் இணைக்கிறது. கீழடி கண்டுப்பிடிப்புகள் மூலம் நான்காயிரம் ஆண்டு பழமையான வரலாற்றுக்கு சொந்தக்காரர்கள் நாம் என்பது உறுதியாகியுள்ளது. கீழடியில் நெல்மணிகள் பயிரிடப்பட்டதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.

**தகுதியை இழப்போம்...**

மொழி சிதைந்தால் இனம் சிதையும். இனம் சிதைந்தால் பண்பாடு சிதையும். பண்பாடு சிதைந்தால் அடையாளம் போய்விடும், அடையாளம் போய்விட்டால் தமிழர்கள் எனச் சொல்லும் தகுதியை இழந்துவிடுவோம். வான்புகழ் வள்ளுவர் பிறந்த மண்ணுக்கு சொந்தக்காரர்கள் நாம். வீழ்வது நாமாக இருப்பினும், வாழ்வது தமிழாக இருக்கட்டும். மொழிப்பற்று, இனப்பற்று நமக்கு உண்டு, அது மொழி வெறி, இனவெறியாக மாறாது. 4,000 ஆண்டுகள் பழமையான வரலாற்றுக்கு சொந்தக்காரர்கள் நாம் என்பது உறுதியாகி இருக்கிறது.

**தமிழ் வளர்ச்சிக்காக....**

நாட்டிலேயே அதிக அளவு அகழாய்வு நடைபெற்ற மாநிலம் தமிழ்நாடு. தி.மு.க. அரசு ஒரு கட்சியின் அரசு அல்ல, இனத்தின் அரசு. எங்கு வாழ்ந்தாலும் தமிழர்கள் ஒற்றுமையுடன் வாழ வேண்டும். நாடுகளும், கடல்களும் பிரித்தாலும் மொழியும், இனமும் நம்மை உணர்வால் இணைக்கிறது. திராவிட மாடல் அரசு அமைந்ததும் அயலகத் தமிழர் நல வாரியம் அமைக்கப்பட்டது. வெளிநாடுகளுக்கு சென்றவர்கள் வாழ்க்கை தேடிச் சென்றவர்கள் இல்லை, அந்த நாடுகளை வளப்படுத்த சென்றவர்கள். வெளிநாடுகளில் வாழ்ந்தாலும் தமிழ்நாட்டை அயலகத் தமிழர்கள் மறக்கவில்லை. வெளிநாடுகளிலும் தமிழ் மொழி வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறோம்.

**பாதிக்கக்கூடாது...**

இலங்கையில் அறிமுகமாகும் புதிய அரசியலமைப்பு சட்டத்தால் தமிழர்களின் உரிமை பாதிக்கக்கூடாது என வலியுறுத்தி பிரதமருக்கு கடிதம் எழுதினேன். தமிழர்கள் கனவு கண்டால் அது நிறைவேறும். 2030-ம் ஆண்டை மனதில் வைத்து உங்க கனவ சொல்லுங்க திட்டம் தொடங்கப்பட்டுள்ளது என்றார்.

# சென்னையில் 17 ஆண்டுகளுக்கு பிறகு டபுள் டெக்கர் பேருந்து சேவை தொடக்கம்

சென்னை, ஜன. 13-

**சென்னையில் 17 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் டபுள் டெக்கர் பேருந்து சேவையை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.**

1970 ம் ஆண்டுகளில் சென்னையை கலக்கி வந்த டபுள் டக்கர் பேருந்துகள், சென்னையின் அடையாளமாகவே பார்க்கப்பட்டது. இந்த பேருந்தானது தாம்பரத்தில் இருந்து சென்னை ஐகோர்ட்டு வரை இயக்கப்பட்டது. இந்த பேருந்தில் பயணிப்பதற்காகவே அதிகளவில் சுற்றுலா பயணிகள் சென்னைக்கு படையெடுக்க தொடங்கினர். பொதுமக்களின் வரவேற்பு அதிகளவில் இருந்தாலும் பராமரிப்பு செலவு அதிகளவில் இருந்த காரணத்தால் டபுள் டக்கர் பேருந்து கடந்த 2008ஆம் ஆண்டு நிறுத்தப்பட்டது.

இந்த நிலையில் தற்போதைய இளம் தலைமுறைகளை மற்றும் சுற்றுலா பயணிகள் அதிகளவில் ஈர்க்கும் வகையில், தமிழக போக்குவரத்து கழகம் பல்வேறு அதிநவீன பேருந்துகளை இயக்கி வருகிறது. அந்த வகையில் மீண்டும் 18 ஆண்டுகளுக்கு பிறகு சென்னையில் டபுள் டக்கர் பேருந்து இயக்கப்படவுள்ளது.

அதன்படி, அயலக தமிழர்கள் நிதி பங்களிப்புடன் முதல் கட்டமாக குளிர்சாதன வசதி கொண்ட ஒரு மின்சார டபுள் டெக்கர் பேருந்து அசோக் லேலண்ட் நிறுவனம் தயாரித்துள்ளது. சிவப்பு நிறத்தில் இருக்கும் இந்த பேருந்தின் இரு பக்கவாட்டிலும் தஞ்சை பெரியகோயில், கலங்கரை விளக்கம், ரிப்பன் கட்டிடம், ஜல்லிக்கட்டு காளையை அடக்கும் வீரன் உள்ளிட்ட புகைப்படங்கள் இடம்பெற்றுள்ளன. அதில், மிகப்பெரிய அளவில் தமிழ் வாழ்க என எழுத்துகளும் இடம்பெற்றுள்ளன.

இந்நிலையில், சுற்றுலா பயணிகளுக்காக, டபுள் டெக்கர் பேருந்து இயக்கத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்தார். தமிழகத்திலுள்ள கலாச்சார கட்டிடங்களை சுற்றுலா பயணிகள் பார்வையிடும் வகையில் பேருந்துகள் இயக்கப்பட உள்ளன. அதாவது, சென்னை வாலாஜா சாலையில் உள்ள சுற்றுலாத்துறை தலைமை அலுவலகத்தில் இருந்து செண்ட்ரல், துறைமுகம் எல்.ஐ.சி. உள்ளிட்ட பகுதிகளுக்கு பேருந்துகள் இயக்கப்பட உள்ளன. பழைய நினைவுகளை மீட்டெடுக்கும் விதமாகவும், போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையிலும் அமைந்துள்ள இந்த டபுள் டெக்கர் பேருந்து சேவைக்கு சென்னை மக்களிடையே பெரும் வரவேற்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தங்கம் விலை புதிய உச்சம்

சென்னை, ஜன. 13-

வாரத்தின் முதல் நாளான நேற்று ஆபரணத் தங்கம் விலை மீண்டும் புதிய உச்சம் தொட்டு விற்பனையானது.

சென்னையில் 22 காரட் ஆபரணத் தங்கம் விலை கிராமுக்கு ரூ.220 உயர்ந்து ஒரு கிராம் ரூ.13,120க்கு விற்பனையானது. அதுவே சவரனுக்கு ரூ.1,760 உயர்ந்து ஒரு சவரன் 1,04,960க்கும் விற்பனையானது. அதேபோல 18 காரட் தங்கம் விலை கிராமுக்கு ரூ.180 உயர்ந்து ஒரு கிராம் ரூ.10,945க்கு விற்பனையானது. மேலும் சவரனுக்கு ரூ.1,440 உயர்ந்து ஒரு சவரன் ரூ.87,560க்கும் விற்பனையானது.

வெள்ளி விலையும் ஒரே நாளில் கிராமுக்கு ரூ.12 உயர்ந்து ஒரு கிராம் ரூ.287க்கும், கிலோவுக்கு ரூ.12,000 உயர்ந்து ஒரு கிலோ ரூ.2,87,000க்கும் விற்பனையானது.

சமீப காலமாக தங்கம், வெள்ளி விலை தொடர்ந்து உயர்ந்து வருவது மக்களை கலக்கத்தில் ஆழ்த்தியுள்ளது.

## சட்டசபை தேர்தல் முன்னேற்பாடு பணிகள்:

# தேர்தல் ஆணைய அதிகாரிகள் விரைவில் தமிழ்நாடு வருகை

புதுடெல்லி, ஜன. 13-

**தேர்தல் முன்னேற்பாடுகள் தொடர்பாக இந்திய தேர்தல் ஆணைய அதிகாரிகள் அடுத்த மாதம் (பிப்ரவரி) தமிழகத்திற்கு வருகை தந்து ஆலோசனை மேற்கொள்ள உள்ளனர்.**

தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா, மேற்கு வங்காளம் மற்றும் அசாம் ஆகிய 5 மாநிலங்களில் வரும் ஏப்ரல், மே மாதங்களில் சட்டசபை தேர்தல் நடைபெற இருக்கிறது. தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகள் எல்லாம் தேர்தல் பரீட்சைக்கு தயாராகும் வகையில், இப்போதே முழு வீச்சில் களம் இறங்கியுள்ளன. கூட்டணி பேச்சு வார்த்தைகள் திரை மறைவில் நடந்து வருகின்றன.

இது ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்க, மற்றொரு பக்கம் 5 மாநில தேர்தல்களையும் அமைதியாக நடத்தி முடிக்க இந்திய தேர்தல் ஆணையம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. தமிழகத்தில் நடைபெற்று வரும் தி.மு.க. ஆட்சியின் பதவிக்காலம் மே மாதம் 10-ந் தேதியுடன் முடிவடைகிறது. எனவே, அதற்கு முன்பு சட்டசபை தேர்தல் நடத்தி முடிக்க வேண்டும்.

பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ள மேற்கு வங்காளத்தில் 5 கட்டங்களாக சட்டசபை தேர்தலை நடத்த தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது. அங்கு 2-வது கட்ட தேர்தல் நடக்கும் போது, அத்துடன் தமிழகத்திலும் தேர்தலை நடத்த தேர்தல் ஆணையம் திட்டமிட்டுள்ளதாக தெரிகிறது. எனவே, அடுத்த மாதம் (பிப்ரவரி) இறுதியிலோ, மார்ச் முதல் வாரத்திலோ தேர்தல் தேதி அறிவிக்கப்பட வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது.

ஏற்கனவே, தமிழகத்தில் வாக்காளர் பெயர் பட்டியலில் தீவிர திருத்தப் பணிகள் நடைபெற்று வருகிறது. வரும் 18-ந் தேதி வரை இந்தப் பணிகள் நடைபெற உள்ளது. இறுதி வாக்காளர் பட்டியல் அடுத்த மாதம் 17-ந் தேதி வெளியிடப்பட உள்ளன. அப்போது, பட்டியலில் பெயர் உள்ளவர்கள்தான் சட்டசபை தேர்தலில் வாக்களிக்க முடியும்.

இந்த நிலையில், தேர்தல் முன்னேற்பாடுகள் தொடர்பாக இந்திய தேர்தல் ஆணைய அதிகாரிகள் அடுத்த மாதம் (பிப்ரவரி) தமிழகத்திற்கு வருகை தந்து ஆலோசனை மேற்கொள்ள உள்ளனர். இந்த ஆலோசனையில் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி, மாவட்ட தேர்தல் அதிகாரிகளான கலெக்டர்கள் மற்றும் போலீஸ் டிஜிபி உள்பட காவல் துறை அதிகாரிகள் கலந்துகொள்ள இருக்கின்றனர்.

## பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பு தொடர்பாக

# ஜெர்மன் அதிபர் மெர்ஸுடன் பிரதமர் மோடி ஆலோசனை

### பயங்கரவாத ஒழிப்பில் இணைந்து செயல்படவும் முடிவு


அகமதாபாத், ஜன. 13-

**ஜெர்மன் அதிபர் மெர்ஸ் - பிரதமர் மோடி தங்களுடைய உயர்மட்ட குழுவினருடன் இருதரப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். இதில் ராணுவம், பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் இருநாடுகளும் ஒத்துழைப்புடன் செயல்படுவதற்கான வழிகளை ஆய்வு செய்தனர்.**

ஜெர்மனியின் அதிபர் பிரெட்ரிக் மெர்ஸ், பிரதமர் மோடி விடுத்த அழைப்பை ஏற்று இந்தியாவில் 2 நாள் அரசு முறை பயணம் மேற்கொண்டுள்ளார்.

இதற்காக நேற்று காலை இந்தியாவுக்கு வருகை தந்த அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. கடந்த ஆண்டு அதிபராக பொறுப்பேற்ற பின் ஆசிய நாடுகளுக்கு மெர்ஸ் மேற்கொள்ளும் முதல் பயணம் இதுவாகும்.

இந்நிலையில், பிரதமர் மோடி மற்றும் ஜெர்மனி அதிபர் மெர்ஸ் இருவரும் குஜராத்தின் அகமதாபாத் நகரில் உள்ள சபர்மதி ஆசிரமத்துக்கு நேற்று காலை சென்று மகாத்மா காந்திக்கு அஞ்சலி செலுத்தினர். இதன்பின் இரு தலைவர்களும் காந்திநகரில் உள்ள மகாத்மா மந்திர் கூட்ட அரங்கில், சமீபத்தில் 25 ஆண்டுகளை நிறைவு செய்த இந்திய-ஜெர்மனி மூலோபாய நட்புறவில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை குறித்து மறுஆய்வு செய்தனர்.



இதன்பின்னர், இதே கூட்ட அரங்கில் இரு தலைவர்களும், தங்களுடைய உயர்மட்ட குழுவினருடன் இருதரப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். அப்போது, இந்தியாவிற்கும் ஜெர்மனிக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது பற்றிய ஆலோசனைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. குறிப்பாக பயங்கரவாத ஒழிப்பில் இருநாடுகளும் இணைந்து செயல்பட முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் வர்த்தகம், முதலீடு, தொழில்நுட்பம், கல்வி, திறன் மேம்பாடு மற்றும் செயல்பாடு ஆகியவற்றில் உள்ள ஒத்துழைப்பை மறு ஆய்வு செய்தனர். ராணுவம், பாதுகாப்பு, அறிவியல், புதிய கண்டுபிடிப்பு, ஆராய்ச்சி மற்றும் நிலையான வளர்ச்சி ஆகியவற்றில் ஒத்துழைப்புடன் செயல்படுவதற்கான வழிகளை ஆய்வு செய்தனர். இந்த ஆலோசனை கூட்டத்தில் மத்திய வெளிவிவகார துறை மந்திரி ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் மற்றும் வெளிவிவகார துறைக்கான செயலாளர் விக்ரம் மிஸ்ரி ஆகியோரும் கலந்து கொண்டனர்.


# அ.தி.மு.க. கூட்டணியில் மேலும் ஒரு புதிய கட்சி இணையவுள்ளது

### எடப்பாடி பழனிசாமி தெரிவித்ததாக தகவல்

சென்னை, ஜன. 13-

**ஓரிரு நாட்களில் அ.தி.மு.க. கூட்டணியில் புதிய கட்சி ஒன்று இணையவுள்ளதாக அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.**

சென்னை ராயப்பேட்டையில் உள்ள அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் அ.தி.மு.க. வேட்பாளர் நேர்காணல் கடந்த வெள்ளிக்கிழமை தொடங்கி நடைபெற்று வருகிறது. முன்னதாக அ.தி.மு.க. சார்பில் தேர்தலில் போட்டியிட 10,000 -க்கும் அதிகமான விருப்ப மனுக்கள் அளிக்கப்பட்டன. அதன் தொடர்ச்சியாக கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, விருப்ப மனு அளித்தவர்களிடம் நேர்காணல் செய்து வருகிறார்.



அவ்வாறு நேற்று 3-வது நாளாக நேர்காணலுக்கு வந்தவர்களிடம் இ.பி.எஸ். பேசுகையில், "அ.தி.மு.க. கூட்டணியில் ஒரு சில நாட்களில் புதிய கட்சி இணையவுள்ளது. அ.தி.மு.க. கூட்டணி வலிமையாக உள்ளது. மேலும் சில கட்சிகளுடன் நாங்கள் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். நம்பிக்கையுடன் இருங்கள். அ.தி.மு.க. வெற்றி பெற்று தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும். தேர்தலில் வெற்றி பெற அனைவரும் கடுமையாக உழைக்க வேண்டும்" என்று பேசியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அ.தி.மு.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அ.தி.மு.க., பா.ஜ.க., பா.ம.க. (அன்புமணி) ஆகியோர் இணைந்துள்ள நிலையில் புதிதாக இணையவுள்ள கட்சி எது? என பரபரப்பு கிளம்பியுள்ளது. தே.மு.தி.க., பா.ம.க. (ராமதாஸ் தரப்பு), ஓ.பி.எஸ்., டி.டி.வி.தினகரன் ஆகியோருடன் கூட்டணி பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாகக் கூறப்படும் நிலையில் தமிழக அரசியல் களத்தில் எந்த கட்சி என்ற எதிர்பார்ப்பு மேலோங்கியுள்ளது.


## மார்க்கெட் விலை நிலவரம்

BSE +301.93 பாயிண்ட் 83,878.17

NSE +106.95 பாயிண்ட் 25,790.25



**தங்கம்**
1 சவரன் ₹ 1,04,960
1 கிராம் ₹ 13,120




**வெள்ளி**
1 கிலோ ₹ 287,000
1 கிராம் ₹ 287.00

**டாலர்** ₹ 90.18

**பெட்ரோல்** ₹ 100.75
டீசல் ₹ 92.34

எங்களுக்கு யாரும் ஆணையிட முடியாது:

# அதிபர் ட்ரம்பின் மிரட்டலுக்கு கியூபா அதிபர் மிகுவெல் பதில்



**ஹவானா, ஜன. 13-**

கடைசி சொட்டு இரத்தம் உள்ள வரை தாயகத்தைப் பாதுகாக்க கியூபா தயாராக உள்ளது என அந்நாட்டின் அதிபர் தெரிவித்துள்ளார்.

கடந்த 3-ந்தேதி, அமெரிக்கா ராணுவத்துறையினர் வெனிசுலா நாட்டிற்குள் அதிரடியாக நுழைந்து அந்த நாட்டின் அதிபர் நிக்கோலஸ் மதுரோவையும், அவரது மனைவியையும் கைது செய்து நாடு கடத்தினர். அவர்கள் நியூயார்க் சிறையில் அடைக்கப்பட்டுள்ள நிலையில், அமெரிக்க சட்டப்படி அவர்கள் மீதான விசாரணை நடைபெற்று வருகிறது.

இதற்கிடையில், வெனிசுலாவில் இருந்து இனி கியூபாவிற்கு எரிபொருள் வர்த்தகம் நடைபெறாது என அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவித்துள்ளார். இது குறித்து அவர் தனது சமூக வலைதள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், ''இனி வெனிசுலாவில் இருந்து எரிபொருளோ அல்லது பணமோ கியூபாவிற்கு செல்லாது. காலம் கடப்பதற்குள் அமெரிக்க அரசுடன் கியூபா ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும் என வலியுறுத்துகிறேன்'' என்று பதிவிட்டுள்ளார்.

வெனிசுலாவின் நட்பு நாடாக விளங்கும் கியூபா, தனது எரிபொருள் தேவைக்காக வெனிசுலாவையே பெருமளவில் நம்பி இருக்கிறது. இந்த சூழலில், வெனிசுலாவின் எரிபொருளை அமெரிக்காவுக்கு வழங்க வேண்டும் என அந்நாட்டின் இடைக்கால அதிபராக பதவியேற்றுள்ள டெல்சி ரோட்ரிகுவெஸிடம் ட்ரம்ப் வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிலையில், ட்ரம்பின் மிரட்டலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் கியூபா அதிபர் மிகுவெல் டயாஸ்-கானல் மெர்முடெஸ், 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது;- ''மனித உயிர்கள் உள்பட அனைத்தையும் வியாபாரமாக மாற்றுபவர்களுக்கு கியூபாவை நோக்கி விரல் நீட்ட எந்த தார்மீக அதிகாரமும் இல்லை. கியூபாவின் மக்கள் இறையாண்மையுடன் தங்களுக்கான அரசியல் மாதிரியை தேர்வு செய்வதை பொறுக்க முடியாமல் நமது நாட்டின் மீது வெறுப்பை கொட்டுகிறார்கள்.

கியூபாவின் பொருளாதார நெருக்கடிக்கு புரட்சியை குறை கூறுபவர்கள் தங்கள் நாக்கை அடக்கிக் கொள்ள வேண்டும். ஏனென்றால் அமெரிக்கா கடந்த 60 ஆண்டுகளாக பயன்படுத்தி வந்த கழுத்தை நெரிக்கும் நடவடிக்கைகளின் பலனை இப்போது அனுபவித்து வருகிறது.

கியூபா ஒரு சுதந்திரமான, இறையாண்மை கொண்ட நாடு. நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று யாரும் எங்களுக்கு ஆணையிட முடியாது. கியூபா ஆக்கிரமிப்பு செய்யவில்லை, அது 66 ஆண்டுகளாக அமெரிக்காவால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. மேலும் கியூபா யாரையும் அச்சுறுத்துவதில்லை. கடைசி சொட்டு இரத்தம் உள்ள வரை தாயகத்தைப் பாதுகாக்க கியூபா தயாராக உள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## பாலமேடு, அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டிக்களுக்கான ஏற்பாடுகள் தீவிரம்

**மதுரை, ஜன. 13-**

பாலமேட்டில் வருகிற 16-ம் தேதியும், அலங்காநல்லூரில் 17-ம் தேதியும் ஜல்லிக்கட்டு போட்டிகள் நடைபெற உள்ள நிலையில் போட்டிக்கான ஏற்பாடுகள் விறுவிறுப்படைந்துள்ளது.

ஆண்டுதோறும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பாலமேடு, அலங்காநல்லூரில் உலகப்புகழ் ஜல்லிக்கட்டு போட்டிகள் நடைபெறுவது வழக்கம். அதன்படி இந்த ஆண்டு பொங்கல் பண்டிகையையொட்டி, பாலமேட்டில் வருகிற 16-ந் தேதியும், அலங்காநல்லூரில் 17-ந் தேதியும் ஜல்லிக்கட்டு போட்டிகள் நடைபெற உள்ளது.

இதற்காக பாலமேட்டில் உள்ள மஞ்ச மலை சுவாமி ஆற்று திடலில் தயார் நிலையில் வாடிவாசல், பார்வையாளர் மாடம் மற்றும் இரண்டு அடுக்கு பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் பல்வேறு பாதுகாப்பு முன்னேற்பாடு பணிகள் விறுவிறுப்பாக நடந்து வருகின்றன.

இதே போல் அலங்காநல்லூரிலும் ஜல்லிக்கட்டு போட்டியை முன்னிட்டு முன்னேற்பாடு பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. அதன்படி கோட்டைமுனி சாமி திடல், வாடிவாசல், பார்வையாளர்கள் அமரும் இரும்பு தடுப்பு மேடை, வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் அமரும் இடம் மற்றும் இரண்டு அடுக்கு பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டு வருகிறது.

இந்த பணிகள் அனைத்தும் முழுவீச்சில் நடந்து வருகிறது. பாலமேட்டில் நடைபெறும் ஜல்லிக்கட்டு போட்டியில் தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினும், அலங்காநல்லூரில் நடைபெறும் ஜல்லிக்கட்டு போட்டியில் முதல்வர் மு.க.ஸ்டாலினும் கலந்து கொண்டு போட்டியை தொடங்கி வைக்கிறார்கள். இதை முன்னிட்டு போலீசாரும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை தீவிரமாக செய்து வருகின்றனர்.

# அரசு மருத்துவமனைக்குள் புகுந்து மர்மநபர்களால் ஒருவர் கொலை

## எடப்பாடி பழனிசாமி கண்டனம்



**சென்னை, ஜன. 13-**

கீழ்ப்பாக்கம் மருத்துவமனைக்குள் புகுந்து கர்ப்பிணி பெண்கள் இருக்கும் மகப்பேறு மருத்துவ பிரிவின் அருகில் ஆதி என்பவரை அடையாளம் தெரியாத கும்பல் சரமாரியாக வெட்டி கொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு எடப்பாடி பழனிசாமி கண்டனம் தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சித்தலைவருமான எடப்பாடி பழனிசாமி தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது; தமிழகத்தின் தலைநகர் சென்னையில் நாள்தோறும் நூற்றுக்கணக்கான நோயாளிகளும், பொதுமக்களும் வந்து செல்லும் கீழ்ப்பாக்கம் மருத்துவமனைக்குள் புகுந்து கர்ப்பிணி பெண்கள் இருக்கும் மகப்பேறு மருத்துவ பிரிவின் அருகில் ஆதி என்பவரை அடையாளம் தெரியாத கும்பல் சரமாரியாக வெட்டி கொலை செய்துவிட்டு தப்பியோடியிருக்கிறது. பொது மக்களின் உயிரை காக்கும் அரசு மருத்துவமனைகள், உயிரை பறிக்கும் களமாகவும், கஞ்சா செடி வளர்க்கும் இடமாகவும் மாறியிருப்பது மிகுந்த வேதனைக்குரியது மட்டுமல்ல கண்டனத்திற்குரியது.

சட்டம் ஒழுங்கை பேணிக்காக்க வேண்டிய காவல்துறையை தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் முதலமைச்சரோ, தமிழகம் அமைதிப்பூங்காவாக திகழ்கிறது என வழக்கம் போல பொய்யான அறிக்கையை படித்துவிட்டு போலி நாடகத்தை அரங்கேற்றி கொண்டிருக்கிறார். பேருந்து நிலையங்கள், காவலர் குடியிருப்புகள், அரசு மருத்துவமனைகள் என கொலைகள் நடைபெறாத இடங்களே இல்லை என்று சொல்லும் அளவிற்கு கொலைக்களமாகவும், ரவுடிகளின் தலைமையிடமாகவும் தமிழகம் மாறிவருவதை அறியாமல், சிலம்பம் சுற்றுவதையும், விண்டேஜ் கார் ஓட்டுவதையும் ரீல்ஸ் எடுத்து பதிவிட்டு விளையாடும் ஒரு பொம்மை முதலமைச்சரை பெற்றிருப்பது தமிழக மக்களின் சாபக்கேடு.

தமிழக காவல்துறைக்கென நிரந்தர டி.ஜி.பி.யை கூட நியமிக்காததால் காவல்துறையாலும் தமிழக மக்கள் இன்னும் என்னென்ன துயரங்களை சந்திக்க வேண்டியிருக்குமோ என்ற அச்சம் மக்களிடையே உருவாகியுள்ளது. பொதுமக்களே அவரவர் உயிர் பாதுகாப்பை அவரவர்களே உறுதி செய்து கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## அன்புமணி ஆதரவு எம்.எல்.ஏ-க்கள் 3 பேர் பா.ம.க.வில் இருந்து நீக்கம்

**சென்னை, ஜன. 13-**

அன்புமணி ஆதரவு எம்.எல்.ஏ.க்கள் 3 பேரைக் பா.ம.க.விலிருந்து இருந்து நீக்கி ராமதாஸ் உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து பா.ம.க. பொதுச்செயலர் முரளி சங்கர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கட்சி விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட சட்டமன்ற உறுப்பினர்களிடம் பாட்டாளி மக்கள் கட்சியினுடைய ஒழுங்கு நடவடிக்கை குழுவின் மூலம் விளக்கம் கேட்டு 20.07 2025 ல் அனுப்பப்பட்ட கடிதத்திற்கு இதுவரை பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் மற்றும் தலைவர் மருத்துவர் அய்யா அவர்களிடம் நேரிலோ, தொலைபேசியிலோ அல்லது கடிதம் மூலமாகவோ எந்தவித பதிலும் அளிக்காமல் தொடர்ந்து கட்சி விரோத நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதால், மயிலம் சட்டமன்ற உறுப்பினர் ச.சிவக்குமார், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம். தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி.வெங்கடேஸ்வரன் ஆகிய மூவரும் கட்சியின் நற்பெயருக்கு குந்தகம் விளைவிக்கும் செயல்களில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதால், தற்காலிக நீக்கம் செய்யப்பட்டிருந்த அவர்கள் மூவரும் கட்சியின் அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்து பதவிகளில் இருந்தும் நேற்று 12.01.2026 முதல் முழுமையாக நீக்கப்படுகிறார்கள். பாட்டாளி மக்கள் கட்சியினர் யாரும் மேற்கண்ட மூவரிடம் எந்தவித கட்சித் தொடர்பும் வைத்துக்கொள்ள வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறார்கள். இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

# தூய்மைப் பணியாளர்களின் போராட்டம் முடிவுக்கு வந்தது

## அமைச்சர் சேகர் பாபு தகவல்

**சென்னை, ஜன. 13-**

150 நாட்களுக்கு மேலாக போராடி வந்த தூய்மைப் பணியாளர்களின் போராட்டத்திற்கு தீர்வு ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தூய்மைப் பணிகளை மேற்கொண்டு வரும் ஒப்பந்த ஊழியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும், மாநகராட்சி பணிகளை தனியார்மயமாக்குவதை கைவிட வேண்டும் உள்ளிட்ட 16 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னை மாநகராட்சியில் உள்ள 5 மற்றும் 6-வது மண்டலங்களில் பணியாற்றி வரும் தூய்மைப் பணியாளர்கள் தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், அம்பத்தூரில் உண்ணாவிரதம் இருந்து வந்த சென்னை மாநகராட்சியின் 5வது மற்றும் 6வது மண்டல தூய்மைப் பணியாளர்களை அமைச்சர் சேகர் பாபு மற்றும் மேயர் பிரியா நேரில் சந்தித்து பேசினர். இதனையடுத்து பழச்சாறு கொடுத்து பெண் தூய்மைப் பணியாளரின் உண்ணாவிரதத்தை அமைச்சர் சேகர் பாபு முடித்து வைத்தார்.

இதனையடுத்து செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் சேகர்பாபு, ''இம்மாத இறுதிக்குள் தூய்மை பணியாளர்கள் சென்னை மாநகராட்சியின் கீழ் பணி அமர்த்தப்படுவார்கள். இந்த பொங்கல் தூய்மை பணியாளர்களுக்கு மகிழ்ச்சியான பொங்கலாக இருக்கும்'' என்று வாக்குறுதிஅளித்தார். இதனை கேட்டதும் தூய்மைப் பணியாளர்கள்குத்தாட்டம் போட்டு தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். இதன்மூலம் தனியார்மயமாக்கலை எதிர்த்து 150 நாட்களுக்கு மேலாக போராடி வந்த தூய்மைப் பணியாளர்களின் போராட்டம் தீர்வை எட்டியுள்ளது.

மிரட்டலுக்கு அடிபணிந்ததா வெனிசுலா..?

# 37 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான எண்ணெய்யை அமெரிக்காவுக்கு அனுப்பியது

**நியூயார்க், ஜன. 13-**

37 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான எண்ணெய் அமெரிக்காவுக்கு வெனிசுலா அனுப்பி வைத்துள்ளதாக அதிபர் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோ ஒரு போதை பொருள் பயங்கரவாதி என்றும் அந்நாட்டில் இருந்து அமெரிக்காவுக்குள் அபாயகர போதை பொருட்கள் கடத்தப்படுகின்றன என்றும் ட்ரம்ப் கடுமையான குற்றச்சாட்டுகளை கூறி வந்த நிலையில், நிக்கோலஸ் மதுரோவும், அவருடைய மனைவி சிலியா புளோரசும் அமெரிக்க ராணுவ வீரர்களால் இந்த மாத தொடக்கத்தில், கைது செய்யப்பட்டு வெனிசுலாவில் இருந்து நாடு கடத்தப்பட்டனர்.


இதனை தொடர்ந்து, நிக்கோலஸ், அவருடைய மனைவி புளோரஸ் மீது நியூயார்க் நகரில் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டு உள்ளது. அவர்கள் விரைவில் அமெரிக்க கோர்ட்டுகளில், அமெரிக்க மண்ணில், அமெரிக்க நீதியை பெறுவார்கள் என அமெரிக்க அட்டர்னி ஜெனரல் பமீலா போண்டி கூறினார். இது உலக நாடுகளால் பரபரப்பாக பார்க்கப்படுகிறது.

எண்ணெய் வளத்திற்காக வெனிசுலா குறி வைக்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டும் ட்ரம்புக்கு எதிராக எழுந்தது. வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோ கைது செய்யப்பட்ட பின்னர், இந்த மாத தொடக்கத்தில், நாட்டின் தற்காலிக ஜனாதிபதியாக டெல்சி எலோய்னா ரோட்ரிக்ஸ் முறைப்படி பதவியேற்று கொண்டார். எனினும், இதுவும் ட்ரம்பின் முடிவே என்ற சர்ச்சையும் எழுந்துள்ளது.

இந்நிலையில், வெனிசுலாவின் நிலைமை பற்றி ட்ரம்பிடம் கேட்கப்பட்டது. அப்போது செய்தியாளர்களிடம் அவர் கூறும்போது, வெனிசுலா உண்மையில் சிறப்பாக பணியாற்றுகிறது. அந்நாட்டின் தலைமையுடன் நாங்கள் நன்றாகவே இணைந்து செயல்படுகிறோம். அது எப்படி வேலை செய்ய போகிறது என நாம் எல்லோருமே பார்க்க போகிறோம் என்றார்.

வெனிசுலாவின் இடைக்கால ஜனாதிபதி டெல்சியுடன் ட்ரம்ப் பேசியுள்ளார். அதுபற்றி குறிப்பிட்ட ட்ரம்ப், அவர் நல்ல முறையில் பேசுகிறார். எங்களிடம் 5 கோடி எண்ணெய் பீப்பாய்கள் உள்ளன. அவற்றை எடுத்து கொள்ள முடியுமா? என்று டெல்சி என்னிடம் கேட்டார். அதற்கு நான், நிச்சயம். எங்களால் அது முடியும் என்றேன். அதன் மதிப்பு ரூ.37 ஆயிரம் கோடியாகும். எண்ணெய் பீப்பாய்கள் தற்போது அமெரிக்காவிற்கு வந்து கொண்டிருக்கின்றன என்றார். இதனால், வெனிசுலாவின் வளங்கள் அமெரிக்காவுக்கு நாடு கடத்தப்படும் சூழல் காணப்படுகிறது.

**13-01-2026**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** தொழில் விரிவாக்கத்துக்கு அரசு ஆதரவும், அதிகாரிகளால் அனுகூலம் ஏற்படும். சாஸ்திர பயிற்சியில் தெளிவு ஏற்படும். தனலாபம், புதிய நண்பர்கள் சேர்க்கை என புதிய உற்சாகங்கள் பொங்கும்.

**ரிஷபம்:-** எதிர்பார்த்த இடங்களில், இருந்து பல நாட்களுக்குப் பிறகு, எதிர்பார்த்த தனவரவு உண்டாகும். பால்ய நண்பரை சந்தித்து மகிழ்வீர்கள். இதுவரை இருந்து வந்த உடல் உபாதைகள் நீங்கும்.

**மிதுனம்:-** திறமையுடன் செயல்பட்டாலும் இகழ்ச்சியே மிஞ்சும். பெண்கள் மூலம் பணம் விரயமாகும். கோபத்தைக் குறைப்பது நல்லது. வியாபாரிகளுக்கு இலாபங்கள் ஓரளவு குறையும்.

**கடகம்:-** அரசிடம் இருந்து எதிர்பார்க்கும் உதவிகள் தாமதப்படும். வேண்டாத விவகாரங்களால் மனக்கவலை ஏற்படலாம். மனைவியால் குடும்பத்தினரிடையே ஒற்றுமை குறையலாம்.

**சிம்மம்:-** வாகன சுகங்கள் சிறப்பாக இருக்கும். மற்றவர்கள் பொறாமை கொள்ளும் அளவுக்கு உயர்வீர்கள். சிலர் காதலில் விழ கூடும். மனைவி மூலம் நன்மைகள் ஏற்படும்.

**கன்னி:-** நண்பர்களே மோசம் செய்வார் எனவே, எவரிடமும் எச்சரிக்கையாக இருக்கவும். மற்றவர் விவகாரங்களில் மூக்கை நுழைக்காதிருப்பது நல்லது. காரியத் தடைகள் மூலம் ஆர்வம் குறையும்.

**துலாம்:-** தனலாபம், குடும்பத்தில் நிம்மதி, சுகம் ஆகியவை அதிகரிக்கும். மனத்தெம்பும், மன மகிழ்ச்சியும் ஏற்படும். மனைவியின் ஒத்துழைப்புக் கிடைக்கும். பணவரவு உண்டு.

**விருச்சிகம்:-** புண்ணிய காரியங்களில் ஈடுபாடு அதிகரிக்கும். குடும்பத்தினரிடையே வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. கவனமாகப் படித்து முன்னேற கல்வியில் சிறப்புண்டு.

**தனுசு:-** உங்கள் இனிய பேச்சு சாதுர்யத்தால் எடுத்த காரியங்கள் அனைத்திலும் வெற்றி அடைவீர்கள். வியாபாரிகளுக்கு பேச்சே மூலதனமாகும். அரசால் ஆதாயம் உண்டு.

**மகரம்:-** உங்கள் செயல்களில் வெற்றி பெற மிகுந்த அக்கறை எடுக்க நேரும். தன்னம்பிக்கை அதிகரிக்கும், முன்னேற்ற வாய்ப்புகள் கதவைத் தட்டும். பயணத்தில் தடைகள் ஏற்படலாம்.

**கும்பம்:-** பெண்களால் லாபம் ஏற்படும். திருமணம் போன்ற சுபகாரியங்கள் மற்றும் எல்லா வகையிலும் நன்மைகள் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டு.

**மீனம்:-** தொழில், வியாபாரத்தில் நஷ்டம் ஏற்படும்.. கவனமாக இருக்கவும். பெண்கள் மூலம் குடும்பத்தில் கலகம் உருவாகலாம். வழக்குகளை தள்ளிப் போடுவது நல்லது.

# வனப்பரப்பை அதிகரிப்பதில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது

## அமைச்சர் ராஜகண்ணப்பன் பெருமிதம்



**நாகர்கோவில், ஜன. 13-**

வனப்பரப்பை அதிகரிப்பதில் தமிழகம் முன்னணியில் உள்ளது என்று அமைச்சர் ராஜகண்ணப்பன் தெரிவித்துள்ளார்.

தமிழக வனத்துறை அமைச்சர் ராஜகண்ணப்பன் குமரி மாவட்டம் வந்தார். அவர் நாகர்கோவில் வடசேரியில் உள்ள அரசு ரப்பர் கழகத்தில் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். ரப்பர் கழகத்தின் செயல்பாடுகள் குறித்து அவர் கேட்டறிந்தார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:-

அரசு ரப்பர் கழகத்தின் தற்போதைய நிலை மற்றும் வளர்ச்சி பணிகளை மேற்கொள்வது கூட்டத்தில் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. இதில் பல்வேறு தகவல்கள் சேகரிக்கப்பட்டு உள்ளன. அதன் அடிப்படையில் எடுக்கப்படும் முடிவுகள் வருகிற 17-ந்தேதி மதுரை வரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் தெரிவிக்கப்படும். அரசு ரப்பர் கழகத்தில் 20 ஆண்டுகளாக பணிபுரியும் சி.எல்.ஆர் தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்வது தொடர்பான கோரிக்கை முதலமைச்சரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்படும். வனப்பகுதியை ஒட்டிய பகுதிகளில் குரங்கு தொல்லை இருப்பதாக புகார்கள் வந்துள்ளன. அவற்றை கூண்டுகள் வைத்து பிடித்து வனப்பகுதிக்குள் விட நடவடிக்கை எடுக்கப்படும். சிங்கவால் குரங்குகள் மலைப்பகுதிகளில் வசிப்பவை என்பதால், அவை மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கு வராது.

வனப்பரப்பை அதிகரிப்பதில் தமிழகம் முன்னணியில் இருக்கிறது. மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி 33 சதவீத வனப்பரப்பு என்ற இலக்கை எட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. குமரி மாவட்டத்தில் ரப்பர் பூங்கா அமைப்பது குறித்து தற்போது முடிவெடுக்கப்படவில்லை. அடுத்த முறை தி.மு.க. ஆட்சி தான் தொடரும். எனவே எதிர்காலத்தில் இது குறித்து பரிசீலிக்கப்படும். கேரளாவில் தனியார் காடுகள் சட்டம் அமலில் உள்ள இடங்களில் பணிகள் செய்ய கெடுபிடி காட்டுவது இல்லை என்று கூறப்படுகிறது. ஆனால் கேரளாவில் உள்ள சட்ட திட்டங்களுக்கும், தமிழகத்தில் உள்ள சட்டங்களுக்கும் வேறுபாடு உள்ளது. கேரளாவில் அதிக மலைகள் உள்ளன. இங்கு மலைகள் குறைவு. நமது சட்ட விதிகளுக்கு உட்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

தனியார் காடுகள் சட்டத்தினால் விவசாயிகள் பாதிக்கப்படாமல் இருக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார். ஆய்வு கூட்டத்தில் அமைச்சர் மனோ தங்கராஜ், கலெக்டர் அழகுமீனா, வன அலுவலர் அன்பு, எம்.எல்.ஏ.க்கள் பிரின்ஸ், தாரகை கத்பர்ட், உணவு ஆணைய தலைவர் சுரேஷ்ராஜன், மேயர் மகேஷ், அரசு ரப்பர் கழக தலைவர் சதீஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர். முன்னதாக அமைச்சர் ராஜகண்ணப்பனுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் அறங்காவலர் குழு முன்னாள் தலைவர் பிரபா ராமகிருஷ்ணன், தி.மு.க. மாநகர செயலாளர் ஆனந்த், மண்டல தலைவர் ஜவகர், மாவட்ட துணை செயலாளர் பூதலிங்கம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**மரம் மனிதனின் உரம்**

# ஈரானை மீண்டும் சிறந்த நாடாக மாற்ற ட்ரம்புக்கு திடீர் கோரிக்கை

**பாரீஸ், ஜன. 13-**

ஈரானை மீண்டும் சிறந்த நாடாக மாற்றுங்கள் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்புக்கு முன்னாள் இளவரசர் வேண்டுகோள் விடுத்துள்ளஆர்.

ஈரான் நாட்டில் அதிகரித்துள்ள பணவீக்கம், அத்தியாவசிய பொருட்களின் விலைவாசி உயர்வு, பொருளாதார தேக்கநிலை உள்ளிட்டவற்றால் விரக்தி அடைந்துள்ள மக்கள் அரசுக்கு எதிராக தெருக்களில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 28-ந்தேதி தொடங்கிய மக்களின் போராட்டம், 16-வது நாளாக இன்றும் நீடித்து வருகிறது. ஈரானின் 31 மாகாணங்களில் 100 நகரங்களில் போராட்டம் பரவியுள்ளது. ஆர்ப்பாட்டக்காரர்களை அடக்க பாதுகாப்பு படையினரை அரசு இறக்கி விட்டு உள்ளது. இதன்படி போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

ஈரானின் மறைந்த அரசர் முகமது ரெசா பஹ்லவி. இவருடைய மகன் ரெசா பஹ்லவி (வயது 65). முன்னாள் இளவரசரான பஹ்லவி அந்நாட்டில் இருந்து வெளியேற்றப்பட்டார்.

இந்நிலையில், வெளிநாட்டில் தஞ்சமடைந்துள்ள அவர், ஈரானில் நடந்து வரும் போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்து வருகிறார். அவர், மக்கள் தெருக்களில் இறங்கி, அரசுக்கு எதிராக தொடர்ந்து போராடுங்கள் என கூறினார்.

இந்த நிலையில், அவர் பாக்ஸ் நியூஸ் செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியின் போது, அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு ட்ரம்ப். நீங்கள் அமைதிக்கான மனிதர் என முன்பே ஒரு மரபை உருவாக்கி வைத்து விட்டீர்கள். உங்களுடைய ஆதரவான வார்த்தைகள், விடுதலைக்காக போராடும் வலிமையை ஈரானியர்களுக்கு தந்துள்ளது.

ஒபாமா, பைடன் போன்று நீங்கள் கைவிட்டு விடமாட்டீர்கள் என அவர்களுக்கு தெரியும். இந்த பயங்கரவாத அரசாட்சியின் வீழ்ச்சிக்கு பின்னர், ஈரான் மக்கள் அமைதி, வளத்திற்காக உங்களுடைய சிறந்த நண்பராக மாறுவார்கள். அவர்களை இதில் இருந்து விடுபட உதவி செய்து, ஈரானை மீண்டும் சிறந்த நாடாக மாற்றுங்கள் என கூறினார்.

ஈரானில் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் 420 பேர் வரை பலியாகி இருக்க கூடும் என அமெரிக்காவை அடிப்படையாக கொண்ட மனித உரிமைகள் அமைப்பு ஒன்று அதிர்ச்சி தகவலை தெரிவித்து உள்ளது. அவர்களில் 8 குழந்தைகளும் அடங்குவார்கள். போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் 2,600 பேர் அரசால் கைது செய்யப்பட்டு உள்ளனர். வன்முறையில் ஈடுபடும் அவர்கள் கடவுளின் எதிரிகள் என அரசு கூறியுள்ளது. இதனால் அந்நாட்டு சட்டப்படி, அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஆப்கானிஸ்தானில் நிலநடுக்கம்

**காபூல், ஜன. 13-**

ஆப்கானிஸ்தானில் நேற்று காலை நிலநடுக்கம் ஏற்பட்டது. காலை 8.48 மணியளவில் ரிக்டர் அளவில் 4.2 ஆக இந்த நிலநடுக்கம் பதிவாகி உள்ளதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

10 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், 36.65 டிகிரி வடக்கு அட்சரேகையிலும், 69.54 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் உடனடியாக வெளியாகவில்லை.




**சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற அயலகத் தமிழர் தினம் 2026 விழாவில் அண்ணாமலைக்கு தமிழ் மாமணி விருதினை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். உடன் அமைச்சர் நாசர் மற்றும் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் முருகானந்தம் பொதுத்துறை செயலாளர் ரீட்டா ஹரீஷ் தக்கர் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.**

### மத்திய அரசை கண்டித்து
# கேரளா முதல்வர் பினராயி விஜயன் ஒரு நாள் சத்தியாக்கிரக போராட்டம்



**திருவனந்தபுரம், ஜன. 13-**
மத்திய அரசின் மக்கள் விரோத நடவடிக்கைகளை கண்டித்து கேரள முதல்வர் பினராயி விஜயன் நேற்று திருவனந்தபுரத்தில் ஒரு நாள் சத்தியாக்கிரக போராட்டத்தை நடத்தினார்.

இதில் அமைச்சர்கள், எம்எல்ஏக்கள், இடதுசாரி கூட்டணி கட்சித் தலைவர்கள் உள்பட ஏராளமானோர் பங்கேற்றனர்.

கேரள அரசின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை மத்திய அரசு முடக்கி வருவதாக முதல்வர் பினராயி விஜயன் குற்றம்சாட்டி வருகிறார். இதைக் கண்டித்து கடந்த சில மாதங்களுக்கு முன்பு பினராயி விஜயன் தலைமையில் டெல்லியில் போராட்டம் நடைபெற்றது.

இதன் தொடர்ச்சியாக மத்திய அரசைக் கண்டித்து திருவனந்தபுரத்தில் ஜனவரி 12ம் தேதி (நேற்று) ஒரு நாள் சத்தியாக்கிரக போராட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

அதன்படி நேற்று காலை 10 மணியளவில் முதல்வர் பினராயி விஜயன் தலைமையில் திருவனந்தபுரம் தியாகிகள் நினைவிடம் அருகே போராட்டம் தொடங்கியது. இதில் முகம்மது ரியாஸ், சஜி செரியான், வீணா ஜார்ஜ், ராஜேஷ், ராஜீவ் உள்பட அமைச்சர்கள், எம்எல்ஏக்கள், இடதுசாரி கூட்டணி கட்சித் தலைவர்கள் உள்பட ஏராளமானோர் பங்கேற்றனர். நேற்று மாலை 5 மணி வரை போராட்டம் நடைபெற்றது. மத்திய அரசு கேரளாவின் வளர்ச்சியை தடுத்து மாநில அரசையும், மக்களின் கழுத்தையும் நெரிக்கிறது. அரசியல் ரீதியாக மத்திய அரசு கேரளாவை பழிவாங்குகிறது.

இதைக் கண்டித்துத்தான் போராட்டம் நடைபெற்றதாக முதல்வர் பினராயி விஜயன் தன்னுடைய முகநூலில் குறிப்பிட்டுள்ளார்.

### 45 சவரன் நகையைக் கண்டெடுத்து ஒப்படைத்த
# தூய்மை பணியாளருக்கு ரூ.1 லட்சம் வழங்கி முதல்வர் ஸ்டாலின் பாராட்டு

**சென்னை, ஜன. 13-**
தூய்மைப் பணியின் போது கண்டெடுத்த 45 சவரன் தங்க நகைகளை, காவல் நிலையத்தில் ஒப்படைத்த தூய்மைப் பணியாளருக்கு ரூ.1 லட்சம் பரிசுத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு வருமாறு., சென்னை மாநகராட்சி தூய்மைப் பணியாளர் பத்மா நேற்று முன்தினம் (ஜன. 11) சென்னை, தியாகராய நகர், வண்டிக்காரன் சாலையில் தூய்மைப் பணியில் ஈடுபட்டிருந்த போது கண்டெடுத்த 45 சவரன் தங்க நகைகளை பாண்டி பஜார் காவல் நிலையத்தில் ஒப்படைத்து, பிறருக்கு முன்னுதாரணமாக திகழ்ந்ததை பாராட்டி, அவருக்கு சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்து, பரிசுத்தொகையாக ரூ.1 லட்சத்திற்கான காசோலையினை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று (ஜன. 12) தலைமைச் செயலகத்தில் வழங்கினார். இந்நிகழ்வின் போது இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர். தூய்மைப் பணியாளர் பத்மாவின் நேர்மையை பாராட்டி, அவருக்கு பாராட்டுகள் குவிந்து வருகிறது.

# தி.மு.க.வுடன் கூட்டணி பேச்சுவார்த்தையா...?
### டாக்டர் ராமதாஸ் பதில்

**சென்னை, ஜன. 13-**
சென்னையில் பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:- தேர்தல் நேரத்தில் பலவிதமான யூகங்கள்; பலவிதமான பேச்சுகள், உண்மையும் இருக்கும், பொய்யும் இருக்கும். அதை நீங்கள் (ஊடக நண்பர்கள்) எப்படி எடுத்துக்கொள்வீர் என்பதை பொறுத்து. பா.ஜ.க., தி.மு.க., அ.தி.மு.க. உள்ளிட்ட எந்த அரசியல் கட்சியும் என்னிடம் தேர்தல் கூட்டணி குறித்து எதுவும் பேசவில்லை.

கேள்வி:- உங்களுடைய விருப்பம் என்ன?, தே.ஜ.கூட்டணியில் இருந்து இல்லை என்பது குறித்து நீங்கள் முடிவு எடுத்துவிட்டீர்களா..?..

பதில்:- இது இன்னும் முடிவு எடுக்கவில்லை. நாட்கள் வேகமாக போய்க்கொண்டிருக்கிறது; விரைவில் முடிவு எடுப்போம்.

கேள்வி:- புதிய கூட்டணிக்கு போவதற்கான சூழல் உருவாகியுள்ளதா?

பதில்:- நீங்கள் என்ன சொல்கிறீர்கள் (பத்திரிகையாளர்களை நோக்கி). தேர்தல் நேரத்தில் எதுவும் நடக்கலாம்; நடக்காமலும் போகலாம். தேர்தல் நேரத்தில் எதையும் உறுதிபட சொல்ல முடியாது.

கேள்வி:- தி.மு.க. கூட்டணி பேச்சுவார்த்தை பரிசீலனையில் உள்ளதா?

பதில்:- ஆமாம். இவ்வாறு அவர் கூறினார்.

# கமல்ஹாசனின் பெயர், புகைப்படங்களை பயன்படுத்த ஐகோர்ட் இடைக்கால தடை

**சென்னை, ஜன. 13-**
நடிகர் கமல்ஹாசனின் பெயர், புகைப்படங்களை வர்த்தக ரீதியில் பயன்படுத்த இடைக்கால தடை விதித்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னையைச் சேர்ந்த 'நீயே விடை' என்ற பெயருடைய நிறுவனம், தனது புகைப்படம், பெயர், உலகநாயகன் என்ற படத்தையும், தனது பிரபல வசனத்தையும் தனது அனுமதியின்றி பயன்படுத்தி, டி–சர்ட்களையும், சர்ட்களையும் விற்பனை செய்து வருவதாகக் கூறி, நடிகர் கமல்ஹாசன், சென்னை உயர் நீதிமன்றத்தில் உரிமையியல் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்கு நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி முன் விசாரணைக்கு வந்த போது, தனி உரிமையை பாதுகாக்கும் வகையில், நீயே விடை நிறுவனம் மட்டுமல்லாமல், வேறு எந்த நிறுவனங்களும், தனது பெயர், புகைப்படம், பட்டங்களையும், வசனங்களை, தனது அனுமதியின்றி பயன்படுத்தத் தடை விதிக்க வேண்டும் என, நடிகர் கமல்ஹாசன் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் சதீஷ் பராசரன் மற்றும் வழக்கறிஞர் விஜயன் சுப்பிரமணியன் ஆகியோர் வாதிட்டனர்.

இந்த வாதத்தை ஏற்றுக் கொண்ட நீதிபதி, அனுமதின்றி, வர்த்தக ரீதியில் கமல்ஹாசனின் பெயர், புகைப்படங்களை பயன்படுத்த இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டார். மேலும், மனுவுக்கு பதிலளிக்கும்படி, நீயே விடை நிறுவனத்துக்கு உத்தரவிட்ட நீதிபதி, விசாரணையை பிப்ரவரி மாதத்துக்கு தள்ளிவைத்தார்.

அதேசமயம், கார்ட்டூன்களில் கமல் படத்தை பயன்படுத்த எந்த தடையும் இல்லை எனவும் நீதிபதி தனது உத்தரவில் குறிப்பிட்டுள்ளார். வேறு எவரும் அனுமதின்றி தனது புகைப்படம், பெயரை பயன்படுத்தக் கூடாது என கோரிக்கை விடுத்துள்ளதால், இந்த உத்தரவு குறித்து தமிழ், ஆங்கில பத்திரிகைகளில் விளம்பரங்கள் வெளியிட வேண்டும் என கமல் தரப்புக்கு உத்தரவிட்டுள்ளார்.

மழைத்துளி
மண்ணின்
உயிர்துளி

### போராட்டத்தின் போது கைதான
# ஆசிரியர்களை உடனே விடுவிக்க அரசுக்கு இ.பி.எஸ். வலியுறுத்தல்



**சென்னை, ஜன. 13-**
போராட்டத்தில் ஈடுபட்டு கைதான ஆசிரியர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், தி.மு.க. அளித்த தேர்தல் வாக்குறுதி எண். 311 (சமவேலைக்கு சம ஊதியம்) நிறைவேற்றக் கோரி தொடர்ந்து 17-வது நாளாக இடைநிலை ஆசிரியர்கள் போராடிவரும் நிலையில், இடைநிலை ஆசிரியர்கள் சங்கத்தின் மாநில நிர்வாகிகளான ராபர்ட், தலைவர் ரெக்ஸ் ஆனந்தகுமார், கண்ணன் உள்ளிட்ட 8 பேரை, நேற்று காலை 8 மணியளவில் இருந்து வீட்டு சிறையில் வைத்துள்ளதாக செய்திகள் வருகின்றன.

சுமூகமான முறையில் போராட்டத்தை எதிர்கொள்ளத் தெரியாத கையாலாகாத முதல்வரின் அரசு, இப்படி சட்டத்திற்கு புறம்பான வகையில் கைதுகளில் ஈடுபடுவதும், ஒரு செல்போன் போன்ற அடிப்படை உரிமைகளைக் கூட மறுப்பதும் கடும் கண்டனத்திற்குரியது.

வீட்டுச் சிறையில் உள்ளோருக்கு சிறு தீங்கு நேர்ந்தாலும், அதற்கு முழு பொறுப்பும் அரசுதான் ஏற்க வேண்டும். அறவழியில் போராடியதற்காக , ஆசிரியர்களை கைது செய்து , மறைத்து வைத்து துன்புறுத்துவது என்பது கண்டிக்கத்தக்கது.

கைது செய்யப்பட்டுள்ள ஆசிரியர்களை உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என தி.மு.க. அரசை வலியுறுத்துகிறேன். இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

# பாதையைவிட்டு விலகியது பி.எஸ்.எல்.வி. சி-62 ராக்கெட்
### இஸ்ரோ தலைவர் நாராயணன் தகவல்

**ஸ்ரீஹரிகோட்டா, ஜன. 13-**
பி.எஸ்.எல்.வி. சி-62 ராக்கெட் திட்டமிடப்பட்ட பாதையைவிட்டு விலகியதாக இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் தலைவர் வி. நாராயணன் அறிவித்துள்ளார்.

மூன்றாவது நிலையில் ராக்கெட் திட்டமிடப்பட்ட பாதையைவிட்டு விலகிச் சென்றதாக இஸ்ரோ அறிவித்துள்ளது.

பி.எஸ்.எல்.வி. சி-62 ராக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவன் ஆய்வு மையத்தின் முதலாவது ஏவுதளத்தில் இருந்து நேற்று காலை 10.18 மணியளவில் 16 செயற்கைக்கோள்களை இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) ஏவியது. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (டிஆர்டிஓ) தயாரித்துள்ள பாதுகாப்புத் துறை பயன்பாட்டுக்கான இஓஎஸ்-என் 1 (அன்விஷா) எனும் அதிநவீன செயற்கைக்கோள் உள்பட 16 இந்திய மற்றும் வெளிநாட்டு செயற்கைக்கோள்கள் பி.எஸ்.எல்.வி. சி-62 ராக்கெட்டில் ஏவப்பட்டது.

முதன்மைச் செயற்கைக் கோளான இஓஎஸ்-என் 1, தரையில் இருந்து 505 கி.மீ. தொலைவு கொண்ட சூரிய ஒத்திசைவு சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்பட இருந்தது. அதேபோல், ஸ்பெயின் ஸ்டார்ட் அப் நிறுவனம் உருவாக்கிய கிட் எனப்படும் சிறிய விண்கலமும் அனுப்பப்பட்டது.

அதைப் பூமிக்கு மீண்டும் தரையிறக்கும் சோதனையும் மேற்கொள்ளப்பட இருந்தது. இந்த நிலையில், மூன்றாவது நிலையில் ராக்கெட் திட்டமிடப்பட்ட பாதையைவிட்டு விலகிச் சென்றதாக இஸ்ரோ அறிவித்துள்ளது.

இதுகுறித்து இஸ்ரோ தலைவர் வி. நாராயணன் செய்தியாளர்களுடன் பேசியதாவது:- "பி.எஸ்.எல்.வி. சி62 / இஓஎஸ் - என்1 திட்டத்தை செயல்படுத்த (நேற்று) முயற்சித்துள்ளோம். பி.எஸ்.எல்.வி. ராக்கெட் இரண்டு திட எரிபொருள் நிலைகள் மற்றும் இரண்டு திரவ எரிபொருள் நிலைகளைக் கொண்ட நான்கு நிலை ராக்கெட் ஆகும்.

மூன்றாவது நிலையின் இறுதி வரை ராக்கெட்டின் செயல்பாடு எதிர்பார்த்தபடியே இருந்தது. மூன்றாவது நிலை முடிவடையும் தருணத்தில் ராக்கெட்டில் அதிகப்படியான அதிர்வுகளைக் கண்டோம். இதன் விளைவாக, ராக்கெட்டின் பயணப் பாதையில் ஒரு விலகல் காணப்படுகிறது. நாங்கள் தரவுகளைப் பகுப்பாய்வு செய்து வருகிறோம்" எனத் தெரிவித்துள்ளார்.

### கூட்டணி ஆட்சி விவகாரம் குறித்து
# முதல்வர் ஸ்டாலின், ராகுல் முடிவு செய்வார்கள்: செல்வப்பெருந்தகை

**சென்னை, ஜன. 13-**
ஆட்சியில் பங்கு இல்லை என்பது ஐ.பெரியசாமியின் தனிப்பட்ட கருத்து என தெரிவித்துள்ள செல்வப்பெருந்தகை ஆட்சியில் பங்கு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் காங்கிரஸ் தலைவர்கள் மல்லிகார்ஜுன கார்கே, ராகுல் காந்தி சேர்ந்து முடிவு எடுப்பார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் இருந்து வருகிறது. சட்டமன்ற தேர்தல் நெருங்கி வரும் நிலையில், ஆட்சியில் பங்கு என்ற தனது நிலைப்பாட்டை காங்கிரஸ் தொடர்ந்து தெரிவித்து வருகிறது. ஆனால் கூட்டணி ஆட்சி கிடையாது என்பதில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதியாக இருப்பதாக தி.மு.க.வின் மூத்த அமைச்சர் ஐ.பெரியசாமி கூறி இருந்தார்.

இந்த நிலையில், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை சென்னையில் நேற்று செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது கூட்டணி ஆட்சி குறித்து ஐ.பெரியசாமி பேசியது தொடர்பாக செய்தியாளர்கள் கேள்வியெழுப்பினர். இதற்கு பதிலளித்து செல்வப்பெருந்தகை பேசியதாவது;

எல்லோருக்கும் ஒவ்வொரு கருத்து உண்டு. நாங்கள் எங்களது கருத்தை சொல்லி இருக்கிறோம். ஆட்சியில் பங்கு இல்லை என்பது ஐ.பெரியசாமியின் தனிப்பட்ட கருத்து. ஆட்சியில் பங்கு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் காங்கிரஸ் தலைவர்கள் மல்லிகார்ஜுன கார்கே, ராகுல் காந்தி சேர்ந்து முடிவு எடுப்பார்கள்." என்றார்.

அப்போது 'தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சி எப்போது ?' என செய்தியாளர்கள் கேள்வியெழுப்பினர் இதற்கு பதிலளித்த செல்வப்பெருந்தகை, 'தமிழகத்தில் இப்போது நடப்பதும் காங்கிரஸ் ஆட்சி தான்' என்று கூறியுள்ளார். செல்வப்பெருந்தகையின் இன்றைய பேட்டி, அரசியல் வட்டாரத்தில் பேசுபொருளாகியுள்ளது.

தினபூமியில்
விளம்பரம்
செய்து பயன்
பெறுங்கள்

### ஜனநாயகன் சென்சார் விவகாரம்:
# சுப்ரீம் கோர்ட்டில் படக்குழு அப்பீல்

**புதுடெல்லி, ஜன. 13-**
ஜனநாயகன் சென்சார் விவகாரத்தில் சென்னை உயர்நீதிமன்றம் இடைக்கால தடை விதித்த நிலையில் படக்குழு சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு செய்துள்ளது.

எச்.வினோத் இயக்கத்தில் விஜய் நடித்த 'ஜனநாயகன்' படத்துக்கு தணிக்கை சான்றிதழ் கிடைக்காத நிலையில் படம் வெளியாவதில் தொடர்ந்து சிக்கல் நீடிக்கிறது. 'ஜனநாயகன்' படம் தொடர்பாக வருகிற 21-ம் தேதி கோர்ட்டில் மீண்டும் விசாரணை நடைபெற உள்ளது.

இதற்கிடையில் பொங்கல் விடுமுறை வசூலை குறிவைத்தும் ரசிகர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையிலும் படத்தை பொங்கலுக்குள் ரிலீஸ் செய்வதற்கான நடவடிக்கைகளை படக்குழுவினர் மேற்கொண்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

இந்நிலையில், ஜனநாயகன் சென்சார் விவகாரத்தில் படக்குழு சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு செய்துள்ளது. சென்னை உயர்நீதிமன்றம் இடைக்கால தடை விதித்த நிலையில் சுப்ரீம் கோர்ட்டை தயாரிப்பு நிறுவனம் நாடியுள்ளது.

# மகளிர் உரிமைத்தொகை 50 சதவீதம் உயர வாய்ப்பு

**சென்னை, ஜன. 13-**
தமிழகத்தில் பெண்களுக்காக வழங்கப்படும் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை 50 சதவீதம் உயர வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தமிழகத்தில் 2021-ம் ஆண்டு நடைபெற்ற சட்டசபை தேர்தலில் தி.மு.க. வெற்றிபெற முக்கிய காரணமாக அமைந்தது மகளிர் உரிமைத்தொகை திட்டம். தி.மு.க. தேர்தல் அறிக்கையிலேயே இந்த அறிவிப்புதான் கதாநாயகனாக அமைந்தது. ஆனால், தி.மு.க. வெற்றி பெற்று ஆட்சி அமைந்த உடன் மகளிர் உரிமைத் தொகை திட்டம் தொடங்கப்படவில்லை. நிதி நிலைமையை காரணம் காட்டி, திட்டம் தள்ளிப்போய்க் கொண்டே இருந்தது. இந்த நிலையில், அ.தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள், மகளிர் உரிமைத்தொகை திட்டத்தை எப்போது கொண்டு வருவீர்கள்? என்று மேடைக்கு மேடை பேசத் தொடங்கியது.

இதற்கிடையே, 2023-ம் ஆண்டு மார்ச் மாதம் 27-ந் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் சட்டசபையில் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். அதாவது, பெண்களுக்கு மகளிர் உரிமைத் தொகை மாதம் ரூ.1,000 வழங்கும் திட்டம் செப்டம்பர் 15-ம் தேதி அண்ணா பிறந்த நாளில் தொடங்கப்படும் என்று அறிவித்தார்.

அதன் அடிப்படையில், விண்ணப்பித்தவர்களில் இருந்து பயனாளிகள் அடையாளம் காணும் பணி தொடங்கியது. முதற்கட்டமாக, 1 கோடியே 13 லட்சத்து 75 ஆயிரத்து 492 பெண்களுக்கு மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டம் 2023-ம் ஆண்டு செப்டம்பர் 15-ந் தேதி தொடங்கியது. இதற்காக, மாதந்தோறும் ரூ.1,137 கோடியே 54 லட்சத்து 92 ஆயிரம் நிதி ஒதுக்கப்பட்டது.

இந்த நிலையில், பல பெண்கள் தங்களையும் மகளிர் உரிமைத்தொகை வழங்கும் திட்டத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுத்து வந்தனர். அதன் அடிப்படையில், புதிதாக விண்ணப்பித்த 28 லட்சம் பேரில் இருந்து 16 லட்சத்து 94 ஆயிரத்து 339 பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களுக்கு 2-ம் கட்டமாக மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டத்தை கடந்த டிசம்பர் மாதம் 12-ந் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசும் போது, "மகளிர் உரிமைத் தொகை மேலும் உயர்த்தப்படும்" என்று அறிவித்தார்.

இந்த நிலையில், திண்டுக்கல்லில் நடந்த பொங்கல் விழாவில் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி, "விரைவில் பெண்களுக்கு இனிப்பான செய்தி வர இருக்கிறது" என்று கூறினார். அதாவது, மகளிர் உரிமைத்தொகையை ரூ.1,000-ல் இருந்து ரூ.1,500 ஆக உயர்த்துவது தான் அந்த இனிப்பான செய்தி என்று தி.மு.க. வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்படுகிறது.

ஆனால், சட்டசபையில் வரும் 20-ம் தேதி கவர்னர் ஆற்றும் உரையில் அந்த அறிவிப்பு இடம்பெறுமா?, அல்லது தொடர்ந்து தாக்கல் செய்யப்பட உள்ள இடைக்கால பட்ஜெட்டில் இடம்பெறுமா?, அல்லது தி.மு.க. தேர்தல் அறிக்கையில் தான் இடம்பெறுமா? என்பது இன்னும் தெளிவுபடுத்தப்படவில்லை.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



**த**மிழகத்தில் பொங்கல் பண்டிகையையொட்டியும், தொடர் விடுமுறையின் காரணமாகவும் பொதுமக்கள் தங்களது சொந்த ஊர்களுக்குச் செல்வதால் வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் மற்றும் நீக்கல் பணிகளுக்கான கால அவகாசத்தை தேர்தல் ஆணையம் நீட்டிக்க வேண்டும்.

**- சண்முகம்**




**க**ரூர் கூட்ட நெரிசல் வழக்கை தமிழக அரசு சிறப்பாக விசாரணை செய்து வந்தது. இந்த விசாரணையில் மிரட்டல்கள் எதுவும் வரபோவதில்லை, நியாயமான விசாரணை நடந்திருக்கும். ஆனால் தற்போது சிங்கம் வாயில் தானாக மாட்டிக்கொண்ட கதை போல த.வெ.க. தலைவர் விஜய் சிபிஐ வலையில் சிக்கி இருக்கிறார்.

**- செல்வப்பெருந்தகை**



**பொ**ங்கல் பண்டிகையை முன்னிட்டு தன்னிச்சையாகக் கட்டணத்தை உயர்த்தி வசூல் வேட்டையில் இறங்கியிருக்கும் ஆம்னி பேருந்துகளின் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதோடு, இனி வரும் நாட்களில் இதுபோன்ற கட்டணக் கொள்ளை நடைபெறாத வண்ணம் கண்காணிப்பு நடவடிக்கையையும் தீவிரப்படுத்த வேண்டும்.

**- டி.டி.வி.தினகரன்**



**ம**க்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற நல்ல முயற்சி மேற்கொள்ளும் யாராக இருந்தாலும் அவர்களுக்கு வெற்றி கிடைக்க வேண்டும். அ.தி.மு.க.வின் வாக்குகளை விஜய்யால் அறுவடை செய்ய முடியாது. விஜய்யின் அரசியல் செயல்பாடுகளை பொறுத்திருந்து பார்ப்போம். அவரது பயணம் தற்போது தான் தொடங்கி உள்ளது.

**- நடிகை கவுதமி**

# சென்னை மாநகராட்சியின் பல்வகை பயன்பாட்டிற்காக ரூ.34.40 கோடி மதிப்பீட்டில் 64 புதிய வாகனங்களின் பயன்பாடு

## மேயர் ஆர்.பிரியா தொடங்கி வைத்தார்



**சென்னை,ஜன.13**

மேயர் ஆர்.பிரியா சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.3.75 கோடி மதிப்பீட்டில் 31 புதிய வாகனங்கள், சென்னை என்விரோ சொலியூசன் நிறுவனத்தின் சார்பில் ரூ.30.65 கோடி மதிப்பீட்டில் 33 புதிய வாகனங்கள் என மொத்தம் ரூ.34.40 கோடி மதிப்பீட்டில் திடக்கழிவு மேலாண்மை, தரக்கட்டுப்பாடு, அலுவலர்களின் களஆய்வு, நடைபாதை மற்றும் பேருந்து நிழற்குடைகளில் தண்ணீர் தெளித்து சுத்தம் செய்தல், நாய்கள் பராமரிப்பு, கடற்கரை சுத்தம் செய்தல் உள்ளிட்ட பல்வகை பயன்பாட்டிற்கான 64 புதிய வாகனங்களின் பயன்பாட்டினை (12.01.2026) ரிப்பன் கட்டட வளாகத்தில் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.சென்னை மாநகராட்சியின் சார்பில் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளும் தண்டையார்பேட்டை, அம்பத்தூர் மற்றும் அண்ணாநகர் மண்டலங்களில் உள்ள பேருந்து நிறுத்தங்களில் அமைக்கப்பட்ட பயணியர் நிழற்குடைகள் மற்றும் நடைபாதைகள் அமைக்கப்பட்டுள்ள இடங்களில் நாள்தோறும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பயன்படுத்துவதால் பொதுமக்களின் சுகாதாரத்தை கருத்தில் கொண்டு, இவ்விடங்களை தண்ணீர் மூலம் சுத்தப்படுத்தி தூய்மையாக பராமரிக்க 6 எண்ணிக்கையில் 2 KL கொள்ளளவு கொண்ட தண்ணீர் அடித்து சுத்தம் செய்யும் இலகுரக வாகனங்கள் இன்று பயன்பாட்டிற்கு மேயர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

அலுவலர்களின் களஆய்வுப் பணிகளுக்காக புதியதாக 17 எண்ணிக்கையில் ஆய்வு வாகனங்கள், பொதுமக்களுக்கு இடையூறாக தெருக்களில் சுற்றித்திரியும் நாய்களைப் பிடித்து வெறிநாய்க்கடி நோய்த்தடுப்பூசி செலுத்துதல், கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொள்ளுதல் உள்ளிட்ட நடவடிக்கைகளை மேலும் தீவிரப்படுத்திடும் வகையில், மாநகராட்சியின் நாய்கள் பிடிக்கும் 6 வாகனங்கள்,

பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் மண்டலங்களுக்குட்பட்ட கடற்கரை பகுதிகளில் கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை, அக்கரை மற்றும் உத்தண்டி பகுதியில் உள்ள கடற்கரை மணற்பரப்பினை சுத்தம் செய்யும் பணிக்காக கடற்கரை மணற்பரப்பை சுத்தம் செய்யும் வாகனம், சாலைப் பணிகள், மண்டலங்கள் மற்றும் துறைகள் சார்ந்த பல்வேறு கட்டுமானப் பணிகளின் இனங்களை பணிகள் நடைபெறும் இடத்திற்கு ஆய்வு உபகரணங்களை எடுத்துச் சென்று பரிசோதனைகள் செய்து தரத்தை உறுதி செய்வதற்காக, நடமாடும் தரக்கட்டுப்பாட்டு களஆய்வு வாகனம் என மொத்தம் ரூ.3.75 கோடி மதிப்பீட்டில் 31 வாகனங்களை மாண்புமிகு மேயர் அவர்கள் இன்று பயன்பாட்டிற்குத் தொடங்கி வைத்தார்.மேலும், திருவாளர் சென்னை என்விரோ சொலியூசன் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் சார்பில் இராயபுரம் மற்றும் திரு.வி.க.நகர் மண்டலங்களில் மேற்கொள்ளப்படும் தூய்மைப் பணிகளின் ஒரு பகுதியாக, குப்பைத் தொட்டிகளை சுத்தம் செய்ய 3000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 6 வாகனங்கள், நகர்ப்புற பகுதிகளில் கண்டறியப்படும் இறந்த விலங்குகளை பாதுகாப்பான முறையில் சேகரித்து அகற்றுவதற்காக 2 வாகனங்கள்,

தீ விபத்துகள் ஏற்படும் சூழ்நிலைகளில் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக 3000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 2 தீயணைப்பு இ-வாகனங்கள், மண்டலம்-5 மற்றும் 6க்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் குடிநீர் அல்லாத தேவைகளுக்காக நீர் வழங்க ஏதுவாக 2500 லிட்டர் கொள்ளளவு கொண்ட 6 மின்சார வாகனங்கள்,

மொத்தக் கழிவுகளை உருவாக்குபவர்களிடமிருந்து குப்பை சேகரிப்புக்காக 1 டன் கொள்ளளவு கொண்ட 5 மின்சார வாகனங்கள், கடற்கரைகளில் மணல் மற்றும் குப்பைகளை சுத்தம் செய்யவும், சேகரிக்கவும் டிராக்டர் அடிப்படையிலான 12 வாகனங்கள் என மொத்தம் ரூ.30.65 கோடி மதிப்பீட்டில் 33 புதிய வாகனங்களின் பயன்பாட்டினையும் மேயர் (12.01.2026) ரிப்பன் கட்டட வளாகத்தில் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.இதுதவிர, பெரிய அளவு மற்றும் பேரிடர் கழிவுகளைக் கையாளுவதற்காக ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் புதிதாக 2 கிராபிள் லோடர் வாகனங்களையும் பயன்பாட்டிற்குத் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், துணை மேயர்.மு.மகேஷ் குமார், ஆணையாளர்ஜெ.குமரகுருபரன், இணை ஆணையாளர் (சுகாதாரம்) முனைவர் வீ.ப.ஜெயசீலன், மத்திய வட்டார துணை ஆணையாளர்.எச்.ஆர்.கௌஷிக், நிலைக் குழுத் தலைவர்கள் டாக்டர் கோ. சாந்தகுமாரி (பொது சுகாதாரம்),த.விசுவநாதன் (கல்வி), பாலமுரளி, சீனிவாசன், ராம்கி நிறுவன துணைத் தலைவர். வெங்கடேசன், திட்டத் தலைவர்பரிசுத்தம் வேதமுத்து, செயலாக்கத் தலைவர்.ரவி சண்முகம் கலந்து கொண்டனர்.

# சென்னை திருவிகநகர் மண்டலம் வார்டு-74க்குட்பட்ட பகுதியில் தூய்மைப் பணியாளர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் உட்பட 550 பேருக்கு சமத்துவப்பொங்கல் பரிசு தொகுப்பு: அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா வழங்கினர்



**சென்னை,ஜன.13**

இந்து சமய மற்றும் அறநிலைத்துறை துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும தலைவருமான.பி.கே.சேகர்பாபு மேயர். ஆர்.பிரியா தலைமையில், பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க.நகர் மண்டலம், சோமசுந்தரம் லைன் பகுதியில் இன்று (12.01.2026) நடைபெற்ற நிகழ்ச்சியில் வார்டு-74க்குட்பட்ட தூய்மைப் பணியாளர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு சமத்துவப் பொங்கல் பரிசுத் தொகுப்பினை வழங்கினார்கள்.

முதலமைச்சர் அவர்கள் தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் 2026 திருநாளை தமிழக மக்கள் அனைவரும் சிறப்பாகக் கொண்டாடும் வகையில், தமிழ்நாடு அரசு அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்பாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு நீளக்கரும்பு மற்றும் ரொக்கப் பரிசாக ரூ.3,000/-வழங்கியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து, தூய்மைப் பணியாளர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள நபர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவருடைய அறிவுறுத்தலுக்கிணங்க பல்வேறு நலத்திட்ட உதவிகளும் பொங்கல் பரிசுத் தொகுப்புகளும் வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இன்று திரு.வி.க.நகர் மண்டலம் வார்டு-74க்குட்பட்ட சோமசுந்தரம் லைன் பகுதியில் சமத்துவப் பொங்கல் விழா நடைபெற்றது.

இந்த விழாவில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர், அனைத்து சமூக மக்கள் வைத்து கொண்டாடிய சமத்துவ உங்கள் விழாவில் பங்கேற்றார். மாட்டுப் பொங்கலை சிறப்பித்திடும் வகையில் பசு மாடு மற்றும் கன்றுகளுக்கு இனிப்பு கரும்பு மற்றும் பழங்களை வழங்கினார். பொங்கல் திருநாளில் முக்கிய விளையாட்டான உறியடி விளையாட்டினை மேயர் உறியடித்து தொடங்கி வைத்தார்.

பின்னர், வார்டு-74க்குட்பட்ட தூய்மைப் பணியாளர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் உட்பட மொத்தம் 550 நபர்களுக்கு வேட்டி, சேலை, பச்சரிசி, வெல்லம், முந்திரி, திராட்சை, ஏலக்காய், பாசிப்பருப்பு மற்றும் நெய் உள்ளடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பினையும், இரண்டு மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வண்டியினை வழங்கி, அனைவருக்கும் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்களை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு. தாயகம் கவி, மண்டலக் குழுத் தலைவர் சரிதா மகேஷ் குமார், நிலைக்குழுத் தலைவர் (பொது சுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, மாமன்ற உறுப்பினர்கள் ராஜேஸ்வரி கு, சாரதா, யோக பிரியா, எம்.தாவுத் பீ, பி.அமுதா, ரா.சரிதா, சிஸ்ரீதனி, புனிதவதி எத்திராஜன், மு.சரவணன், எல்.ரமணி, எஸ்.தமிழ்செல்வி, ந. உஷா, க. பொற்கொடி, டாக்டர் பூர்ணிமா, க.வி.நாகவள்ளி, சா.உமா, சுதா தீனதயாளன், லதா வாசு மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை கோடம்பாக்கம் மண்டலம் 142வது வார்டில் உள்ள அப்துல் ரசாக் காய்கறிஅங்காடி ரூ.23.13 கோடி மதிப்பீட்டில் புதியதாக நவீன வசதிகளுடன் கட்டப்பட்டு வரும் பணயினை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அடிக்கல் நாட்டு துவக்கி வைத்தார். இதில் தமிழச்சி தங்கபாண்டியன் எம்பி, துணை மேயர் மகேஷ் குமார், ஆணையர் குமரகுருபரன் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# நீலாங்கரை பகுதியில் காவலாளியை கத்தியை காட்டி மிரட்டி பணம் பறித்த இருவர் கைது

**சென்னை ஜன 13-**

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ரமேஷ்குமார், என்பவர் சென்னை, கொட்டிவாக்கத்தில் உள்ள டாஸ்மாக் பாரில் காவலாளியாக வேலை செய்து கொண்டு, அங்கேயே தங்கி வருவதாகவும், ரமேஷ்குமார் நேற்று முன் தினம் காலை, டாஸ்மாக் பார் எதிரே உள்ள குளத்தின் அருகே சிறுநீர் கழிக்க சென்றபோது, அங்கு மது அருந்திக் கொண்டிருந்த தெரிந்த நபர்களான கார்த்திக் மற்றும் ஜீவானந்தன் ஆகியோர் ரமேஷ்குமாரை வழிமறித்து, தகாத வார்த்தைகளால் பேசி, ''பணம் எவ்வளவு வைத்திருக்கிறாய் கொடு'' என கேட்டபோது, ரமேஷ்குமார் பணம் தர முடியாது என கூறியதாகவும், உடனே 2 நபர்களில் ஒருவர் தான் மறைத்து வைத்திருந்த கத்தியை காட்டி மிரட்டி, ரமேஷ்குமார் வைத்திருந்த பணம் ரூ.500 ஐ பறித்துக் கொண்டு இருவரும் கொலை மிரட்டல் விடுத்து சென்றதாகவும், மேற்படி ரமேஷ்குமார் என்பவர் நீலாங்கரை காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். நீலாங்கரை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரிகள் 1.கார்த்திக், 2.ஜீவானந்தன், ஆகிய இருவரை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

# அசோக்நகர் பகுதியில் தண்ணீர் டேங்கர் லாரி கண்ணாடி உடைப்பு: வாலிபர் கைது

**சென்னை ஜன 13-**

திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஜான்சன், என்பவர் சென்னை, கோடம்பாக்கம் பகுதியில் உள்ள தனியார் தண்ணீர் சப்ளை நிறுவனத்தில் டேங்கர் லாரி ஓட்டுநராக வேலை செய்து வருகிறார். இவர் கடந்த 10.ந் தேதி அன்று மதியம் தண்ணீர் சப்ளை செய்வதற்காக டேங்கர் லாரியை ரங்கராஜபுரம் மெயின் ரோடு, முத்து மாரியம்மன் கோயில் அருகே ஓட்டிச் சென்று கொண்டிருந்தபோது, லாரி செல்வதற்கு வழியில்லாமல் ஒருவர் நடுரோட்டில் கண்ணாடி பாட்டிலை உருட்டி கொண்டிருந்ததாகவும், இதை பார்த்த ஓட்டுநர் ஜான்சன் லாரியை நிறுத்தி அந்த நபரிடம் கண்ணாடி பாட்டிலை எடுக்குமாறு கூறியபோது, அந்த நபர் அவதூறாக பேசி கண்ணாடி பாட்டிலை எடுத்து தண்ணீர் லாரியின் முன் பக்க கண்ணாடி மீது வீசி லாரி கண்ணாடியை உடைத்ததாகவும், ஜான்சன் லாரியிலிருந்து கீழே இறங்கி வந்து ஏன் லாரி கண்ணாடியை உடைத்தாய் என கேட்டதற்கு, அவர் மற்றொரு பாட்டிலை எடுத்து ஜான்சனை தாக்கி கொலை மிரட்டல் விடுத்துச் சென்றதாகவும், மேற்படி நபர் மீது நடவடிக்கை எடுக்கும்படி மேற்கண்ட ஜான்சன் என்பவர் அசோக் நகர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

அசோக்நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்து, இவ்வழக்கில் தொடர்புடைய எதிரி பிரசன்னாகுமார், என்பவரை கைது செய்தனர்.

விசாரணையில் எதிரி பிரசன்னா குமார் மீது ஏற்கனவே ஒரு அடிதடி வழக்கு உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி பிரசன்னாகுமார் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

# கிண்டி பகுதியில் பணம் வைத்து சூதாட்டத்தில் ஈடுபட்ட 48 பேர் கைது

**சென்னை ஜன 13-**

சென்னை கிண்டி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில், காவல் குழுவினர் கிண்டி இரயில் நிலையம் அருகில் உள்ள தனியார் மனமகிழ் மன்றத்தை கண்காணித்தபோது, அங்கு சிலர் பணம் வைத்து சீட்டுக்கட்டுகளுடன் சூதாட்டத்தில் ஈடுபட்டது உறுதி செய்யப்பட்டது. அதன்பேரில் மேற்படி இடத்தில் பணம் வைத்து சூதாட்ட கிளப் நடத்திய 1.முகமது ரபி, மனமகிழ் மன்ற நிர்வாகி 2.மணி, உட்பட 48 பேரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து சூதாட்டத்திற்கு பயன்படுத்திய பணம் ரூ.32,200 ஐ , சீட்டு கட்டுகள் மற்றும் டோக்கன்கள் பறிமுதல் செய்யப்பட்டது. இது குறித்து கிண்டி காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்து, 48 நபர்கள் மீதும் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

# திருவொற்றியூர் மண்டல கூட்டம்: அதிமுக, திமுக மாமன்ற கவுன்சிலர்கள் வாக்குவாதம்




**திருவொற்றியூர் ஜன.13**

சென்னை திருவொற்றியூர் மண்டல மாமன்ற கவுன்சிலர்கள் கூட்டம் மண்டல குழு தலைவர் தி.மு. தனியரசு தலைமையில் உதவி கமிஷனர் பத்மநாபன் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் பங்குபெற்ற மண்டலத்தில் உள்ள ஒரே அதிமுக கவுன்சிலர் டாக்டர் கே கார்த்திக் பேசும்போது எனது 7வது வார்டில் உதவி பொறியாளர் அலுவலகம் சுகாதார அலுவலகம் மற்றும் எனது மாமன்ற கவுன்சிலர் அலுவலகம் 2011 ஆம் ஆண்டில் இருந்து மக்கள் அதிகமாக கூடும் இடமானபாலகிருஷ்ணா நகரில் அமைந்திருந்தது.இந்த அலுவலகங்கள் மூலம் வார்டில் உள்ள அனைத்து மக்களும் பயன் பெற்று வந்தனர். தற்போது இந்த ஆட்சி முடியும் நேரத்தில் உதவி பொறியாளர் அலுவலகத்தை பொதுமக்களின் எந்த விதமான கருத்தும் கேட்காமல் மாற்றியுள்ளனர். அந்த இடம் பொது மக்களுக்குசம்பந்தம் இல்லாதமயானம் மற்றும்பஸ் ஸ்டாண்ட் அருகில் உள்ளது. ஏன் இந்த மாற்றம் என்று கேட்டோர். அதற்கு மண்டல தலைவர் தனியரசு மாநகராட்சி இடத்தை மாற்றுவதற்கு யாரிடமும் கேட்க வேண்டிய அவசியம் இல்லை என்றார். உடனே கவுன்சிலர் கார்த்திக் பொது மக்களுக்கு பயன்படும் இடத்தில் தான் அந்த அலுவலகம் இருக்க வேண்டும். தேவையில்லாமல் அந்த இடத்தை மாற்றியது தவறு என்றார். அதற்கு தலைவர் அது அப்படித்தான் நடக்கும். அதிகாரிகளை நாம் ஒன்றும் கேட்க முடியாது என்றார்.

மீண்டும் கவுன்சிலர் கார்த்திக் பேசும் போது காரில் வெற்றி நகரில் ரூபாய் 10கோடியில் பாதுகாப்பில்லாத மழைநீர்குளம் கட்டப்பட்டுள்ளது. அங்கு கடந்த மாதம் ஒருவர் மீன்பிடிக்க சென்ற போது குளத்தில் மூழ்கி இறந்து விட்டார்.இதுவரை எந்த மேல் நடவடிக்கையும் இல்லை.அந்த குளம்பொதுமக்களுக்கு எதிரானது. பாதுகாப்புஇல்லாதது என்றார். முடிவில் அவர் பேசும்போது இந்த ஆட்சி முடிந்த பின்பு எங்களது தலைவர் எடப்பாடியார்தலைமையில் புதியஅரசு அதை சீரமைக்கும் என்றார். இதற்குஇடையில் 12 வது வார்டு கவுன்சிலர் வழக்கறிஞர் கவி கணேசன்வீராசாமி பேசும் போது ஆட்சி மாறாது.எங்களுடைய திராவிட மாடல்ஆட்சி தான் தொடரும். என்று முடித்து வைத்தார்.

இது குறித்து கவுன்சிலர் கார்த்திக் பேசும்போது உதவி பொறியாளர் அலுவலகம் மாற்றுவதற்கு என்னுடன் ஆலோசிக்கவில்லை என்று உதவி ஆணையரேகூறுகிறார். ஆனால் மண்டலத்தலைவர் கூறும் போது யாரையும் கேட்க வேண்டிய அவசியம் இல்லை என்று கூறுகிறார். அதற்குஅதனை எதிர்ப்புதெரிவிக்கும் வில்லை.மீண்டும் வழக்கறிஞர் கவிகணேசன் வீராசாமி பேசும்போது மாநகராட்சி கவுன்சிலர்களும் அதிகாரிகளும் இணைந்து செயல்பட்டால் தான் மக்கள் பயன்படுவார்கள். எனது வார்டில் அப்படித் தான் நடக்கிறது.ஒரு வாகனத்தின் சக்கரங்களைஇன்றைக்கு இணைந்தால் தான் நாம் சேர வேண்டிய இடத்தில் போய் சேர முடியும். மாநகராட்சி அதிகாரிகளுக்கு ஒன்று சொல்லி கொள்கிறேன். காலம் மாறும். காட்சி மாறாது ஆட்சியும்மாறாது மீண்டும் திராவிட மாடல்ஆட்சிதான் எனபேசிமுடித்து வைத்தார்.கவுன்சிலர் டாக்டர்கே.கார்த்திக் மற்றும்அதிமுகவினர் உதவி பொறியாளர் அலுவலகத்தை இடம்மாற்றியதற்கு கண்டனபதாகையை கையில் பிடித்து கொண்டு மாநகராட்சி நிர்வாகத்திற்கு எதிராககோசமிட்டனர்.

# ஆன்லைன் பங்கு சந்தையில் முதலீடு செய்தால் அதிக லாபம் தருவதாக கூறி ரூ.1.23 கோடி மோசடி வழக்கில் ஒருவர் கைது

**சென்னை ஜன 13-**

சென்னை வில்லிவாக்கம் பகுதியை சேர்ந்த மகேந்திரன் என்பவரின் தொலைபேசி எண்ணிற்கு வாட்ஸ்அப் மூலம் அழைத்து ஆன்லைன் பங்கு சந்தையில் முதலீடு செய்தால் அதிக லாபம் கிடைக்கும் என்ற வந்த வாட்ஸ்ஆப் செய்தியை பார்த்து ஆன்லைனில் பங்கு வர்த்தக விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து முதலில் ரூ.1 லட்சம் பணம் முதலீடு செய்துள்ளார். அதில் வந்த லாபத்திலிருந்து பணத்தை திரும்ப எடுக்க முயன்ற போது புதிய விதிமுறைகள் என்று மேலும் பணத்தினை முதலீடு செய்ய சொல்லியதால் புகார்தாரரும் பல்வேறு வங்கி கணக்குகள் மூலமாக ரூபாய் 1.23 கோடி பணத்தினை டெபாசிட் செய்து மோசடி செய்து விட்டதால், பாதிக்கப்பட்ட மகேந்திரன் என்பவர் சென்னை பெருநகர காவல் ஆணையாளர் அவர்களிடம் 2025ம் ஆண்டு புகார் கொடுத்ததின்பேரில், மத்திய குற்றப்பிரிவு, சைபர் கிரைம் காவல் நிலையத்தில் பிரிவுகளில் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இப்புகார் மீது உரிய விசாரணை மேற்கொண்டு துரித நடவடிக்கை எடுத்திட சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ.அருண், உத்தரவின்பேரில், மத்திய குற்றப்பிரிவு கூடுதல் ஆணையர் வழிகாட்டுதலின்பேரில், மத்திய குற்றப்பிரிவு, சைபர் கிரைம் துணை ஆணையர் மேற்பார்வையில், காவல் ஆய்வாளர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு விசாரணை செய்து, இவ்வழக்கில் தொடர்புடைய எதிரி செந்தில் குமார், என்பவரை

அன்று ஈரோட்டில் கைது செய்தனர். அவரிடமிருந்து 1 செல்போன் பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட எதிரி விசாரணைக்குப் பின்னர் செல்போனை பறிமுதல் செய்யப்பட்டு எதிரியை 11வது பெருநகர குற்றவியல் நடுவர் நீதிபதி, சைதாப்பேட்டை, சென்னை முன்பாக ஆஜர்ப்படுத்தப்பட்டது.

ஆன்லைன் முதலீட்டு மோசடி மற்றும் ஆன்லைன் பகுதி நேர வேலை மோசடி விளம்பரங்கள், பேஸ்புக், இன்ஸ்டாகிராம், யூடியூப் போன்ற சமூக ஊடகங்கள் மூலம் பொதுமக்களை ஏமாற்றும் நோக்கில் குறி வைக்கப் படுவதால், போலியான பங்கு வர்த்தக செயலி இணைப்புகள், மக்களிடம் முதலீடு செய்வதற்கான வலைத்தளங்கள் மற்றும் விதிவிலக்கான லாபம் என்று பொய்யான வாக்குறுதிகளை நம்பியும், போலி டீமேட் கணக்குகளை திறந்தும் ஏமாற வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# ஆயிரம் விளக்கு பகுதியில் இளம்பெண்ணை தாக்கிய 2 பேர் கைது

**சென்னை ஜன 13-**

சென்னை, புரசைவாக்கம் பகுதியில் வசித்து வரும் 31 வயது பெண் ஒருவர் அவரது நண்பருடன் கடந்த 31.ந் தேதி அன்று அதிகாலை, ஆயிரம் விளக்கு, கிரீம்ஸ் சாலையில் உள்ள பி.எஸ்.என்.எல். அலுவலகம் எதிரே நடந்து சென்று கொண்டிருந்த போது, திடீரென அங்கு வந்த இருவர் அந்த பெண்ணை தாக்கி கீழே தள்ளிவிட்டு, அவரது கையை பிடித்து இழுத்ததாகவும், உடனே அப்பெண்ணின் நண்பர் அவர்களை தடுத்தபோது, இருவரும் கொலை மிரட்டல் விடுத்து, ஆட்டோவில் தப்பிச் சென்றனர்.

**தாக்குதல்**

பாதிக்கப்பட்ட அப்பெண் ஆயிரம் விளக்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில், பாரதிய நியாய சன்ஹிதா சட்டம் மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் ஆகிய பிரிவுகளில் வழக்கு பதிவு செய்து, போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.ஆயிரம் விளக்கு காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்து, மேற்படி வழக்கில் தொடர்புடைய எதிரிகள் 1.ஜெயக்குமார், 2.முகமது பரூக், ஆகிய இருவரை கைது செய்தனர்.

**கைது**

எதிரிகளிடமிருந்து குற்றச் செயலுக்கு பயன்படுத்திய 1 ஆட்டோ பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணையில் எதிரி ஜெயக்குமார் என்பவர் மீது ஏற்கனவே 1 கொலை முயற்சி, திருட்டு, வழிப்பறி உட்பட சுமார் 10 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது. கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# சென்னை தேனாம்பேட்டை பகுதியில் ஓஜி கஞ்சா விற்ற இருவர் கைது

**சென்னை ஜன 13-**

சென்னையில்போதைப் பொருள் தடுப்பு நுண்ணறிவுப்பிரிவு காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், தனிப்படையினர் மற்றும் தேனாம்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் ஒருங்கிணைந்து தி.நகர், ஜி.என். செட்டி சாலையில் கண்காணித்து, அங்கு சந்தேகப்படும்படி சொகுசு காரில் இருந்த 2 நபர்களை விசாரணை செய்து, சோதனை செய்தபோது, அவர்கள் ஓஜி கஞ்சா என்ற போதைப்பொருள் மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது.

அதன்பேரில், தேனாம்பேட்டை காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்து, சட்ட விரோதமாக போதைப்பொருள் வைத்திருந்த எதிரிகள் 1.முகமது ஹதிம், 2.கோகுல், ஆகிய இருவரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 1.6 கிலோ ஓஜி கஞ்சா, 1 கார், 4 செல்போன்கள், சிறிய டிஜிட்டல் எடை இயந்திரங்கள்-3 மற்றும் பேக்கிங் கவர்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட 2 எதிரிகளும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

ஆம்புலன்சுக்கு வழிவிடுங்கள்

## வேலூர் மாவட்ட

# மக்கள் குறைத்தீர்வு நாள் கூட்டத்தில் கலெக்டர் வே.இரா.சுப்புலெட்சுமி பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று நடவடிக்கை



**வேலூர் ஜன 13-**
வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக காயிதே மில்லத் கூட்டரங்கில் மக்கள் குறைத்தீர்வு நாள் கூட்டம் கலெக்டர் வே.இரா. சுப்புலெட்சுமி, தலைமையில் நடைபெற்றது.

**குறைதீர் கூட்டம்**

மக்கள் குறைத்தீர்வு நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து வருவாய்த்துறை நிலப்பட்டா, பட்டா மாறுதல், இலவச வீட்டு மனைப்பட்டா, முதியோர் உதவித் தொகை வேளாண்மைத்துறை, காவல்துறை. ஊரக வளார்ச்சித்துறை, நகராட்சி நிர்வாகங்கள், பேரூராட்சித் துறை, கூட்டுறவு கடனுதவி, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் சார்பாக வீடுகள் வேண்டி, மின்சாரத்துறை சார்பான குறைகள், குறித்த மனுக்கள் என 342 மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பெற்றுக்கொண்டு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி மனுக்கள்மீது உரிய விசாரணை மேற்கொண்டு தகுதியானதாக இருப்பின் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இன்று நடைபெற்ற குறைத்தீர்வு நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், பழைய காட்பாடி கிராமத்தை சார்ந்த ருக்குமணி என்ற மாற்றுத்திறனாளிக்கு ரூ.17,130/- மதிப்பிலான பார்வைத்திறன் குறைபாடுடைய மாற்றுத்திறனாளிக்கான மடக்குகுச்சி, கருப்பு கண்ணாடி, பிரெய்லி வாட்ச் மற்றும் டெய்சி பிளேயர், இங்கள் பெர்த் பேர்சிவல் குயின் என்ற மாற்றுத்திறனாளிக்கு ரூ.2,250/- மதிப்பிலான பார்வைத்திறன் குறைபாடுடைய மாற்றுத்திறனாளிக்கான மடக்குகுச்சி, கருப்பு கண்ணாடி, பிரெய்லி வாட்ச் என மொத்தம் ரூ.19,380/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை கலெக்டர் வழங்கினார்.



**வேலூர் மாவட்டம் காட்பாடி சித்தூர் பேருந்து நிலையத்தில் மக்கள் செய்தி தொடர்பு துறை சார்பில் தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சியினை பொதுமக்கள் ஆர்வத்துடன் பார்வயிட்ட காட்சி.**

# அடிப்படையில் குறிக்கோள் இருந்தால் வாழ்க்கையில் வெற்றி பெறலாம்: வி.ஐ.டி. பொங்கல் விழாவில் வேந்தர் கோ.விசுவநாதன் பேச்சு



**வேலூர் ஜன 13**
விஐடி பல்கலைக்கழகத்தில் பொங்கல் விழா இன்று கோலாகலமாக நடந்தது. மாணக்கர் நல இயக்கம், பாவேந்தர் பாரதிதாசன் தமிழ் இலக்கிய மன்றம் மற்றும் வேளாண்மைத்துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொங்கல் விழாவுக்கு விஐடி வேந்தர் முனைவர் கோ.விசுவநாதன் தலைமை வகித்தார்.

இதில் முளைப்பாரி வைத்து, தவில் நாதஸ்வரம் உள்ளிட்ட பல்வேறு இசை கருவிகள் முழங்க பொங்கல் கிராமத்திற்கு விருந்தினர்களை அழைத்து சென்றனர்.

தமிழர் மரபு படி வண்ண கோலங்கள் வரைந்து அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த புதுப்பானையில் பொங்கல் பானைக்கு புத்தரிசி இட்டு பொங்கல் விழாவை வேந்தர் கோ.விசுவநாதன் தொடங்கி வைத்தார்.

விழாவில் கரகாட்டம், பொய்க்கால் குதிரை ஆட்டம், சேவையாட்டம், தேவராட்டம், பறையாட்டம், பெரிய மேளம், ஜிக்காட்டம் ஆகிய கலை நிகழ்ச்சிகள் மாணவ, மாணவிகளை வெகுவாக ஈர்த்தது.வேளாண்மை கல்லூரி சார்பில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐவகை நிலங்களை மாதிரிகளாக கொண்டு அமைக்கப்பட்ட பொங்கல் கிராமத்தை வேந்தர் கோ.விசுவநாதன் உள்ளிட்டோர் பார்வையிட்டனர்.

இதில் நாட்டுப்புற பாடகர் புஷ்பவனம் குப்புசாமி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு திரைப்பட பாடல்களை பாடி மாணவ, மாணவிகளை உற்சாகப்படுத்தினார்.பொங்கல் விழாவில் கிர், காங்கேயம், ஆலம்பாடி, பர்கூர் ஆகிய பல்வேறு இன மாடுகள் இடம் பெற்றிருந்தன. மேலும் வேளாண் உபகரணங்களும், அம்மி மற்றும் உலக்கை ஆகியவையும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

விழாவில் வேந்தர் முனைவர் கோ.விசுவநாதன் பேசியதாவது:தமிழர்களுக்கு என்று இருக்கிற விழா பொங்கல் விழா தான். தமிழர்கள் சுமார் 160 நாடுகளில் வாழ்கிறார்கள். தமிழர்கள் என்று கருதுகின்ற அத்தனை பேரும் கொண்டாடுகிற ஒரே திருவிழா பொங்கல் திருவிழா. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்து வகை நிலங்களை காட்சிப்படுத்தியது பாராட்டுக்குரியது.

தமிழர்களான நமக்கென்று தனியான குணம் உண்டு. ‘தமிழன் என்றோர் இனமுண்டு, தனியே அவர்க்கோர் குணமுண்டு’ என்று சொன்னார்கள். அந்த குணம் தனித்தனியாக இருப்பதல்ல. நாம் அதை சிறிது மாற்றி, அனைவரும் ஒன்றாக இருக்கக்கூடிய அளவுக்கு அந்த நிலையை உருவாக்க வேண்டும்.

நமக்குள்ளே வேறுபாடுகள் இருக்கலாம். எந்த வேறுபாடானாலும் சரி, சேர வேண்டிய நேரத்தில் ஒன்றாக சேர வேண்டும்.

தமிழர்கள் நன்றாக இருக்க வேண்டும். தமிழர்கள் நன்றாக வாழ வேண்டும். நாம் மிகச்சிறந்த ஒரு பண்பாளர்கள் என்பதை உலகுக்கு எடுத்துக்காட்டுகிற அளவுக்கு நம்முடைய வாழ்க்கை அமைய வேண்டும். அதைத் தான் நான் இளைஞர்களுக்கு சொல்ல விரும்புகிறேன்.பேரறிஞர் அண்ணா அவர்கள் ‘கடமை, கண்ணியம், கட்டுப்பாடு’ என்று கூறியது கட்சிக்காரர்களுக்கு மட்டுமல்ல, உலகத்திலே வாழ்கின்ற எல்லா தமிழர்களுக்கும் பொருந்தும்.

அப்படிப்பட்ட ஒரு கட்டுப்பாடு இருந்தால் தான் வாழ்க்கையிலே நம்மால் வெற்றி பெற முடியும். நாம் நன்றாக வாழ்வதற்கு கல்வியைப் பெற வேண்டும். மிகச்சிறந்த கல்வியைப் பெற வேண்டும்.நாம் சிறந்தவர்களாக வாழ்வதற்கு திருக்குறளை படித்து, வழி நின்றாலே போதும். வேறு ஒன்றுமே தேவை இல்லை. 2000 ஆண்டுகளுக்கு முன்பு உலகிலே வேறு யாரும் எழுத முடியாத ஒரு திருக்குறளை திருவள்ளுவர் நமக்கு கொடுத்து விட்டு போய் இருக்கிறார்.

உலகிலேயே அதிகமாக 170 மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. 500 உரை நூல்கள் வந்திருக்கின்றன. எல்லா காலத்திலும், எல்லா நாட்டினராலும், எல்லா மதத்தினராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு நூலாக திருக்குறள் இருக்கிறது.

1930-ல் காந்தி டால்ஸ்டாய்க்கு கடிதம் எழுதினார். அதில் அகிம்சை போராட்டத்தைப் பற்றி எழுதி, அதைப் பற்றி உங்களுடைய கருத்துக்கள் என்ன? வெள்ளையரை எதிர்த்து அவர்களுக்கு எதுவும் தொந்தரவு கொடுக்காமல் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறோம், வருத்தாமல் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறோம் என்பதை பற்றி எழுதினார்.அதற்கு பதில் எழுதிய டால்ஸ்டாய், இப்படி செய்வது மிகச்சிறந்தது என்று சொல்லிவிட்டு, ஆனால் உங்கள் நாட்டுக்கு இது புதிதல்ல. 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ‘இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண நன்னயம் செய்து விடல்’ என்ற திருக்குறளை மேற்கோள் காட்டி அவருக்கு அனுப்பினார்.

அதுவரையிலே காந்திக்கு திருக்குறளை பற்றி தெரியாது. அதற்குப் பிறகு ஆங்கில நூலை படித்துவிட்டு, ‘எனக்கு அடுத்த பிறவி இருக்குமானால், தமிழனாக பிறந்து தமிழிலேயே திருக்குறளை படிக்க வேண்டும்’ என்று கூறினார்.

இப்போது உலகமயமாக்கல் பற்றி பேசி கொண்டிருக்கிறோம். ஆனால், 3000 ஆண்டுகளுக்கு முன்பே கணியன் பூங்குன்றனார் ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்று எழுதிவிட்டு போனார்.தமிழன் நல்லவனாக, வல்லவனாக இருக்க வேண்டும். ஒன்றே ஒன்று, கல்வியிலே நாம் பின்தங்கி விடக்கூடாது. தற்போது இந்திய நாடு உயர்கல்வியிலே பின்தங்கியிருக்கிறது. உயர்கல்வியில் மொத்த மாணவர் சேர்க்கையில் தமிழ்நாடு 50 சதவீதத்தில் இருக்கிறோம். ஆனால், ஐரோப்பிய நாடுகள் எல்லாம் 75 சதவீதத்தை தாண்டிவிட்டனர். அமெரிக்கா 90 சதவீதத்தைத் தாண்டிவிட்டது. தென் கொரியாவும் ஆஸ்திரேலியாவும் நூற்றுக்கு நூறு போய்விட்டார்கள்நாம் அவர்களோடு போட்டி போட்டு உயர்கல்வியை பெற வேண்டும், உழைக்க வேண்டும், வெற்றி பெற வேண்டும். இதற்கெல்லாம் அடித்தளமாக அமைவது நம்முடைய அடிப்படை வாழ்வுரிமைகள், கொள்கைகள். அந்த கொள்கைகளை வகுத்துக் கொடுப்பதுதான் தமிழ் நூல்கள். அதை நினைவில் கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.தொடர்ந்து, வேளாண்மை துறை சார்பில் இரண்டு கையேடுகள் வெளியிடப்பட்டன.

விழாவில் துணைத் தலைவர்கள் சங்கர் விசுவநாதன், செயல் இயக்குநர் சந்தியா பெண்டாரெட்டி, உதவி துணைத் தலைவர் காதம்பரி எஸ்.விசுவநாதன், ரமணி பாலசுந்தரம், துணை வேந்தர் காஞ்சனா பாஸ்கரன், இணை துணைவேந்தர் பார்த்தசாரதி மல்லிக், பதிவாளர் ஜெயபாரதி, மாணக்கர் நல இயக்குநர் நைஜூ மற்றும் பேராசிரியர்கள், வெளி மாநிலம் மற்றும் வெளிநாடுகளை சேர்ந்த மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

# செங்கத்தில் மத்திய அரசை கண்டித்து காங்கிரஸ் நிர்வாகிகள் உண்ணாவிரதம்




**செங்கம் ஜன 13-**
செங்கம் துக்காப்பேட்டை புதிய பேருந்து நிலையம் அருகே மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் பெயர் மாற்றம் மற்றும் திருத்தம் கொண்டு வந்த மத்திய அரசை கண்டித்து உண்ணாவிரத போராட்டம் திருவண்ணாமலை தெற்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளராக திருவண்ணாமலை தெற்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் செங்கம் ஜி.குமார் கலந்துகொண்டு பேசினார். ஆர்ப்பாட்டத்தில் டி.வி.எஸ் தொழிற்சங்க தலைவர் குப்புசாமி, மாநில நிர்வாக குழு உறுப்பினர் மார்க்கெட் குமார், பி.சி.சி ராஜி, முன்னாள் நகர தலைவர் ஆசைமுசீர் அஹமது, நகர காங்கிரஸ் தலைவர் காந்தி, மாவட்ட காங்கிரஸ் துணைத் தலைவர் அண்ணாதுரை, சென்னசமுத்திரம் முன்னாள் தலைவர் குணசேகரன், மாரி, எல்.ஐ.சி பாரதி, வழக்கறிஞர் அறிவொளி பாபு மற்றும் மாவட்ட, நகர நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

மாண்பமை சார்பு நீதிமன்றம் செங்கம்
OS No 109/2025

சிவசங்கர் (வயது 35)
தபெ முருகேசன்
நியாவிலை கடைதெரு,
தீத்தாண்டப்பட்டு கிராமம் மற்றும் அஞ்சல்
செங்கம் வட்டம்,
திருவண்ணாமலை மாவட்டம்.

......... வாதி

முனியம்மாள் (வயது சுமார் 40)
கபெ அரசகுமார்
அம்பேத்கர்நகர் நகர்,
தீத்தாண்டப்பட்டு கிராமம் மற்றும் அஞ்சல்
செங்கம் வட்டம்,
திருவண்ணாமலை மாவட்டம்.

......பிரதிவாதி

அறிவிப்பு :
மேற்படி வழக்கின் வாதி எதிர்வாதியாகிய ஆகிய தங்களுக்கெதிராக மாண்பமை சார்பு நீதிமன்றம் செங்கத்தில் வழக்கு எண் அதாவது OS No 109/2025 ஆக விசாரணைக்கு எடுத்து அதில் மாண்பமை நீதிமன்றம் பல முறை தங்களுக்கு அழைப்பாணை அனுப்பியும் தாங்கள் தங்கள் அழைப்பாணை பெறாமல் தவிர்த்து வருவதால் எதிர்வாதியாகிய தங்களுக்கு நாளிதழியில் விளம்பரம் கொடுக்க உத்தரவிட்டு வழக்கானது எதிர்வரும் 29.01.2026 அன்று விசாரணைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது ஆகையால் எதிர்வரும் 29.01.2026 அன்று காலை 10.00 மணியளவில் தாங்கள் மாண்பமை சார்பு நீதிமன்றம் செங்கத்தில் நேரடியாகவோ அல்லது வழக்கறிஞர் மூலமோ நேரில் ஆஜராகுமாறு அப்படி தவறும் பட்சத்தில் தங்கள் வருகை இல்லாமலே மேற்படி வழக்கு தீர்மானிக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றனர்.

இங்ஙனம் :
J.மதி B.A.,B.L., வழக்கறிஞர்
MS No 2876/2025
பெருமாள்கோவில்தெரு, செங்கம்
செல் : 8778188730 9626731571

## ஆற்காடு நகராட்சி

# மேல் நிலை நீர் தோக்க தொட்டி கட்டும் பணி: நகர மன்ற தலைவர் ஆய்வு



**ஆற்காடு,ஜன, 12-**
ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு நகராட்சியில் சார்பில் கோட்டை மேடு பகுதியில் 6லட்சம் லிட்டர் கொள்ளலவு கொண்ட மேநீர் தேக்க தொட்டி கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன இந்த பணிகளை நகர மன்ற தலைவர் தேவி பென்ஸ் பாண்டியன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும் பணிகளை தரமாகவும் விரைந்து முடிக்கவும் ஒப்பந்தாரரிடம் அறிவுறுத்தினார். ஆய்வின்போது நகராட்சி அதிகாரிகள், நகரமன்ற உறுப்பினர் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers No.18/19 R.N.R. Arcade, Katpadi Road Vellore-4
Ph: 0416-4203997 E-Mail: velloredi@thinaboomi.com RNI. Regn No.TNTAM/2003/15101
Editor: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# சென்னை விஐடி மற்றும் தமிழக அரசின் மனிதவள கார்ப்பரேஷன் நிறுவனம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்




**வேலூர் ஜன 13**
சென்னை நந்தம்பாக்கத்தில் உள்ள வர்த்தக மையத்தில் நடந்த நிகழ்ச்சியில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் வெளிநாடுகளில் பயிலும் மாணவர்களுக்கான கல்வி மற்றும் வேலைவாய்ப்பு, மொழி பயிற்சி மற்றும் பணியமர்த்தல் சேவைகள் வழங்குவது தொடர்பாக விஐடி சென்னை மற்றும் தமிழக அரசின் மனிதவள கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் விஐடி நிறுவனர்-வேந்தர் முனைவர் கோ.விசுவநாதன் மற்றும் தமிழக அரசின் மனிதவள கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் கே.பாலசுப்பிரமணியம் ஆகியோர் கையெழுத்திட்டனர். அருகில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், விஐடி துணைத் தலைவர் முனைவர் ஜி.வி.செல்வம், உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

# ஆற்காடு முதியோர் இல்லத்தில் பொங்கல் விழா



**ராணிப்பேட்டை ஜன, 13-**
ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு மகாத்மா காந்தி இலவச முதியோர் இல்லத்தில் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. விழாவிற்கு முதியோர் இல்லத்தின் தலைவர் ஜெ.லட்சுமணன் தலைமை தாங்கினார். செயலாளர் ஜெ. சஜன்ராஜ் ஜெயின் பொருளாளர் பி. என். பக்தவச்சலம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிர்வாக குழு உறுப்பினர் ஏ.எல். திருஞானம் வரவேற்றார்.

ரத்தினகிரி பாலமுருகனடிமை சுவாமிகள், கலவை சச்சிதானந்த சுவாமிகள் சிறப்பு பூஜை செய்து பொங்கல் விழாவை தொடங்கி வைத்தனர்.

விழாவில் ஆற்காடு ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம் எல் ஏ, ஓய்வு பெற்ற வேலூர் மாவட்ட கலெக்டர் செ.ராஜேந்திரன், சென்னை தனலட்சுமி பொறியியல் கல்லூரி நிறுவனத் தலைவர் வி.பி .ராமமூர்த்தி, ஜோதிடர் குமரேசன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு முதியோர்களுக்கு புத்தாடைகள் வழங்கினார்கள். இந்த விழாவில் டாக்டர். பி .என்.எஸ் .சரவணன், , உதவும் உள்ளங்கள் செயலாளர் சந்திரசேகர் மற்றும் முதியோர் இல்ல உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முடிவில் துணைத் தலைவர் எஸ் .ஆர். பி பென்ஸ் பாண்டியன் நன்றி கூறினார்.

# நாச்சிப்பட்டு தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத்தில் பொங்கல் தொகுப்பு

## மு.பெ.கிரி எம்எல்ஏ தொடங்கி வைத்தார்



**செங்கம் ஜன 13-**
செங்கம் அடுத்த மண்மலை பகுதியில் உள்ள செ.நாச்சிப்பட்டு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் உள்ள ரேஷன் அட்டைதாரர்களுக்கு பொங்கல் தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. செங்கம் நகர திமுக செயலாளரும் முன்னாள் கூட்டுறவு கடன் சங்க தலைவரும் கோயில்கள் அறங்காவலர்கள் குழு தலைவருமான அன்பழகன் தலைமை தாங்கினார். செங்கம் தாசில்தார் முருகன் முன்னிலை வகித்தார். தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்க செயலாளர் கிருஷ்ணமூர்த்தி வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக செங்கம் எம்எல்ஏ மு.பெ.கிரி கலந்துகொண்டு பொங்கல் தொகுப்புகளை ரேஷன் அட்டைதாரர்களுக்கு வழங்கி, பேசினார். உடன் திமுக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்

தின பூமி
நாளிதழ்
படியுங்கள்



**திருப்பத்தூர் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள பெரிய ஏரியில் சமத்துவ பொங்கலை முன்னிட்டு, அனைத்து நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி பகுதிகளில் தூய்மை பணியாளர்கள் மற்றும் தூய்மை காவயர்கள் மூலம் பெரிய அளவிலான சுகாதாரப்பணிகள் மேற்கொள்ளப்படும் பணியினை கலெக்டர் க.சிவசௌந்திரவல்லி.தலைமையில் தூய்மை உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.**

தமிழ்நாடு அரசு
அரும்பாவூர் பேரூராட்சி
பெரம்பலூர் மாவட்டம்

ந.க.எண்: 619/2025 ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள்: 09.01.2026

அரும்பாவூர் பேரூராட்சியில் கலைஞர் நகர்ப்புர மேம்பாடு திட்டம் 2025-2026 திட்டத்தின் கீழ் பின்வரும் விவரப்படியான தார்சாலை அமைத்தல் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து (இரு உறை) மின்னனு ஒப்பந்தப்புள்ளி முறையில் வரவேற்கப்படுகிறது. நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 23.01.2026 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். அன்றைய தினம் பிற்பகல் 3.30 மணிக்கு வருகைபுரிந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும்.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. (இலட்சத்தில்) | முன்வைப்புத் தொகை (ரூபாயில்) 1 சதவீதம் | பணி முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| 1. | Providing BT Road at Ramalinga Nagar East to West Street, Gogul Nagar East to West Street, Poonga Nagar South to North 1st Cross, Annai Nagar South to North 1st Street, APR Nagar 1st Cross East to West, APR Nagar 2nd Cross South to North, Thaluthalai Road PHC Road, MBC colony 2nd Street South to North, MBC Colony 4th Street South to North, MRC Nagar 1st Cross South to North, MRC Nagar 2nd Cross South to North, Vallalar Street East in Arumbavur Town Panchayat. | 96.00 | 96,000.00 | 3 மாதங்கள் |

1. ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 09.01.2026 பிற்பகல் 3.00 மணி முதல் http://tntenders.gov.in/ என்ற இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். 2. மேலே கண்டுள்ள அட்டவணையில் கலம் எண்.(4)ல் குறிப்பிட்டுள்ள முன் வைப்புத் தொகை 23.01.2026 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்குள் இணையதளம் வாயிலாக செலுத்தப்பட வேண்டும். 3. இதர நிபந்தனைகளை அலுவலக வேலை நாட்களில் வேலை நேரங்களில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

(ஒம்/–) திருமதி. ர. வள்ளியம்மை
தலைவர், அரும்பாவூர் பேரூராட்சி, பெரம்பலூர் மாவட்டம்.

செ.ம.தொ.இ/168/ஒப்பந்தப்புள்ளி/2026

(ஒம்/–) திருமதி. இரா. சபிதா ராகினி,
செயல் அலுவலர், அரும்பாவூர் பேரூராட்சி, பெரம்பலூர் மாவட்டம்.

## அதிவேகமாக 28 ஆயிரம் ரன்:

# சச்சின், சங்ககாரா சாதனையை முறியடித்தார் விராட் கோலி..!



**வதோதரா, ஜன. 13-**
சர்வதேச கிரிக்கெட்டில் அதிவேகமாக 28000 ரன்களைக் கடந்து விராட் கோலி சாதனை படைத்துள்ளார். மேலும் இந்த பட்டியலில் சச்சின், சங்ககாராவையும் அவர் முந்தியுள்ளார்.

**வதோதராவில்...**

இந்தியா மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையேயான முதல் ஒருநாள் போட்டி வதோதராவில் (ஜனவரி 11) நடைபெற்றது. இந்தப் போட்டியில் டாஸ் வென்ற இந்திய அணி பந்துவீச்சைத் தேர்வு செய்ய, நியூசிலாந்து முதலில் விளையாடியது. முதலில் விளையாடிய நியூசிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களின் முடிவில் 8 விக்கெட்டுகளை இழந்து 300 ரன்கள் எடுத்தது. 301 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி இந்திய அணி விளையாடியது.

**சுப்மன் கில் அபாரம்...**

301 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி விளையாடி வரும் இந்திய அணி, 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 200 ரன்களைக் எடுத்திருந்தது. அப்பொழுது ரோகித் சர்மா 26 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இதனையடுத்து, கேப்டன் ஷுப்மன் கில் மற்றும் விராட் கோலி ஜோடி சேர்ந்தனர். இந்த இணை சிறப்பாக விளையாடி அணியின் ஸ்கோரை உயர்த்தியது. சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய கேப்டன் சுப்மன் கில் 71 பந்துகளில் 56 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அதில் 3 பவுண்டரிகள் மற்றும் இரண்டு சிக்ஸர்கள் அடங்கும்.

**624 இன்னிங்ஸ்களில்....**


மறுமுனையில் அற்புதமாக விளையாடிய விராட் கோலி அரைசதம் கடந்தார். அவர் 26 ரன்கள் எடுத்திருக்கையில், சர்வதேச கிரிக்கெட்டில் அதிவேகமாக 28000 ரன்கள் குவித்த வீரர் என்ற சாதனையை படைத்தார். அவர் இந்த சாதனையை 624 இன்னிங்ஸ்களில் படைத்துள்ளார். சர்வதேச கிரிக்கெட்டில் அதிவேகமாக 28000 ரன்களைக் கடந்த வீரர் என்ற சாதனையை இந்திய அணியின் முன்னாள் வீரர் சச்சின் டெண்டுல்கர் தன்வசம் வைத்திருந்தார். அவர் 644 இன்னிங்ஸ்களில் இந்த சாதனையைப் படைத்திருந்தார். தற்போது, அந்த சாதனையை விராட் கோலி முறியடித்துள்ளார்.

### சங்ககராவை பின்னுக்கு தள்ளி...

அரைசதம் கடந்த விராட் கோலி, இலங்கை அணியின் முன்னாள் வீரரான குமார் சங்ககாராவின் சாதனையை முறியடித்தார். சர்வதேச கிரிக்கெட்டில் அதிக ரன்கள் குவித்துள்ள இரண்டாவது வீரர் என்ற சங்ககாராவின் சாதனையை விராட் கோலி முறியடித்துள்ளார். சர்வதேச கிரிக்கெட்டில் சங்ககாரா 28,016 ரன்கள் குவித்துள்ளார். இந்த போட்டியில் அரைசதம் விளாசியதன் மூலம், சங்ககாராவின் இந்த சாதனையை விராட் கோலி முறியடித்துள்ளார்.

## நியூசி.க்கு எதிரான ஒருநாள் தொடர்:

# காயத்தால் வாஷிங்டன் சுந்தர் விலகல்



**மும்பை, ஜன. 13-**
நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் காயம் காரணமாக தமிழக வீரர் வாஷிங்டன் சுந்தர் விலகியுள்ளார்.

**முன்னிலையில்....**

இந்தியா- நியூசிலாந்து அணிகள் ஒருநாள் மற்றும் டி20 தொடரில் விளையாடி வருகிறது. இதில் இரு அணிகளுக்கு இடையேயான முதல் ஒருநாள் போட்டி நேற்று நடைபெற்றது. இந்த போட்டியில் இந்திய அணி 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட தொடரில் இந்தியா 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

இதனையடுத்து இரு அணிகள் மோதும் 2-வது ஒருநாள் போட்டி வருகிற 14-ந் தேதி நடைபெற உள்ளது.

**காயம் காரணமாக....**

இந்நிலையில் முதல் போட்டியின் போது தமிழக வீரர் வாஷிங்டன் சுந்தர் காயமடைந்தார். இந்த காயம் காரணமாக நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் இருந்து விலகியுள்ளார். முன்னதாக டி20 அணியில் இடம் பெற்றிருந்த இடதுகை பேட்டரான திலக் வர்மா காயம் காரணமாக முதல் 3 டி20 போட்டியில் இருந்து விலகி உள்ளார். டி20 உலக கோப்பை தொடங்க இன்னும் சில நாட்களே உள்ள நிலையில் இந்திய வீரர்கள் காயமடைவது இந்திய அணிக்கு பின்னடைவாக பார்க்கப்படுகிறது.

### ஆயுஷ் பதோனி தேர்வு

வாஷிங்டன் சுந்தருக்கு பதிலாக ஆயுஷ் பதோனி முதன் முறையாக இந்திய ஒருநாள் அணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இரண்டாவது ஒருநாள் போட்டி நடைபெறும் இடமான ராஜ்கோட்டில் அவர் அணியுடன் இணைவார்.

## அதிகமுறை சேசிங் செய்து வெற்றி:

# ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி புதிய சாதனை



**மும்பை, ஜன. 13-**
ஒருநாள் போட்டிகளில் அதிகமுறை சேசிங் செய்து வெற்றிபெற்ற அணிகளில் இந்திய அணி முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளது.

**3 போட்டிகள்...**

நியூசிலாந்து அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஒருநாள் போட்டிகளில் விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் ஒருநாள் போட்டி நடைபெற்றது. இதில் முதலில் பேட்டிங் செய்த நியூசிலாந்து அணி 300 ரன்கள் எடுத்தது. அதனை தொடர்ந்து விளையாடிய இந்திய அணி 306 ரன்கள் குவித்து வெற்றி பெற்றது. இதன்மூலம் 3 போட்டிகள் கொண்ட தொடரில் 1-0 என்ற கணக்கில் இந்திய அணி முன்னிலை வகிக்கிறது. 2-வது ஒருநாள் போட்டி நாளை மறுநாள் நடைபெற உள்ளது.

**சரித்திர சாதனை...**

இந்நிலையில் 300 ரன்களை சேசிங் செய்ததன் மூலம் அதிக முறை 300+ ரன்களை சேசிங் செய்த அணி என்ற சரித்திர சாதனையை இந்திய அணி படைத்துள்ளது. இந்திய அணி இதுவரை 20 முறை 300+ ரன்களை சேசிங் செய்து யாரும் தொட முடியாத இடத்தில் உள்ளது. அதற்கு அடுத்த இடத்தில் இங்கிலாந்து (15 முறை) அணி உள்ளது. அதனை தொடர்ந்து ஆஸ்திரேலியா (14), பாகிஸ்தான் (12), இலங்கை (11), நியூசிலாந்து (11) ஆகிய அணிகள் உள்ளன.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

### பரோடா கிரிக்கெட் சங்கம் பாராட்டு



இந்தியா, நியூசிலாந்து அணிகள் இடையிலான முதலாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டி குஜராத் மாநிலம் வதோதராவில் உள்ள கோடாம்பி ஸ்டேடியத்தில் நடந்தது. டாஸ் வென்ற இந்தியா பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி, முதலில் ஆடிய நியூசிலாந்து அணி 50 ஓவரில் 8 விக்கெட் இழப்பிற்கு 300 ரன்கள் எடுத்தது. அடுத்து ஆடிய இந்தியா 49 ஓவரில் 6 விக்கெட்டுக்கு 306 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது.

இந்நிலையில், இந்தப் போட்டியின்போது இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன்களான ரோகித் சர்மா மற்றும் விராட் கோலிக்கு பரோடா கிரிக்கெட் சங்கம் சார்பில் வித்தியாசமான முறையில் பாராட்டு விழா நடந்தது. மைதானத்தின் ஓரம் பீரோ போன்று வைக்கப்பட்டிருந்த பெட்டியில் இருந்து இருவரும் வெளியே வந்ததும் பூச்செண்டு கொடுத்து கவுரவிக்கப்பட்டனர். அவர்கள் அதில் இருந்த தங்களது ஆளுயர புகைப்படத்தில் கையெழுத்திட்டனர். இது ரசிகர்களை வெகுவாகக் கவர்ந்தது.

### மனம் திறந்த விராட் கோலி

இந்தியாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி 3 ஒருநாள் போட்டிகள் மற்றும் 5 டி20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது. 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் போட்டி இன்று வதோதராவில் நடைபெற்றது. போட்டியில் டாஸ் வென்ற இந்திய அணியின் கேப்டன் சுப்மன் கில் பந்துவீச்சை தேர்வுசெய்தார். இதன்படி நியூசிலாந்து முதலில் பேட்டிங் செய்தது. 50 ஓவர்களின் முடிவில் 8 விக்கெட்டுகள் இழப்பிற்கு 300 ரன்கள் குவித்து, இந்தியாவிற்கு வெற்றி இலக்காக 301 ரன்களை நிர்ணயித்தது. தொடர்ந்து விளையாடிய இந்திய அணி 49 ஓவர்களில் 6 விக்கெட்டுகள் இழப்பிற்கு 306 ரன்கள் குவித்தது. இதன்மூலம் 4 விக்கெட் வித்தியாசத்தில் இந்தியா வெற்றிப் பெற்றது. இதன்மூலம் தொடரில் இந்தியா 1-0 என்ற கணக்கில் உள்ளது.

இப்போட்டியில் ரோகித் அவுட்டாகி வெளியேறிய சமயத்தில் கோலி களமிறங்கிய போது மைதானத்தில் இருந்த ரசிகர்கள் கூச்சலிட்டு ஆரவாரம் செய்தனர். போட்டி முடிந்த பின்பு இதுகுறித்து பேசிய கோலி, "ஒருவர் அவுட் ஆகி வெளியே செல்லும்போது, களத்திற்குள் வரும் எனக்கு அதிக ஆர்ப்பரிப்பு எழுவது எனக்கு பிடிக்கவில்லைதான். இதே போல தோனிக்கும் அடிக்கடி நடக்கிறது. ரசிகர்களின் உற்சாகத்தை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. அதே நேரத்தில், அவுட்டாகி வெளியேறுபவர் இதை பெரிதும் விரும்ப மாட்டார் என நினைக்கிறேன்" என்று தெரிவித்தார்.

### அதிர்ஷ்டம் வேண்டும்: ஜாக் காலிஸ்

ஐசிசி டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் வருகிற பிப்ரவரி 7 ஆம் தேதி தொடங்கி மார்ச் 8 ஆம் தேதி வரை நடைபெறுகிறது. போட்டிகள் அனைத்தும் இந்தியா மற்றும் இலங்கையில் நடத்தப்படுகிறது. தொடரின் முதல் போட்டியில் பாகிஸ்தான் மற்றும் நெதர்லாந்து அணிகள் விளையாடுகின்றன. கடந்த 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற டி20 உலகக் கோப்பைத் தொடரில் இந்திய அணி சாம்பியன் பட்டம் வென்றது. இறுதிப்போட்டியில் தென்னாப்பிரிக்காவை வீழ்த்தி இந்திய அணி சாம்பியன் பட்டம் வென்றது.



இந்த நிலையில், ஐசிசி டி20 உலகக் கோப்பையை வெல்ல தென்னாப்பிரிக்க அணிக்கு சிறிது அதிர்ஷ்டம் வேண்டுமென அந்த அணியின் முன்னாள் ஆல்ரவுண்டர் ஜாக் காலிஸ் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் பேசியதாவது: எதிர்வரும் டி20 உலகக் கோப்பைத் தொடரில் தென்னாப்பிரிக்க அணி நன்றாக விளையாடி வெற்றி பெறுவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. டி20 உலகக் கோப்பையை வெல்ல அவர்களுக்கு சிறிது அதிர்ஷ்டமும் தேவைப்படுகிறது. இந்த முறை டி20 உலகக் கோப்பையை வெல்வோம் என்ற நம்பிக்கை இருக்கிறது என்றார். டி20 உலகக் கோப்பைத் தொடரில் பிப்ரவரி 9 ஆம் தேதி நடைபெறும் தனது முதல் போட்டியில் தென்னாப்பிரிக்க அணி, கனடாவை எதிர்த்து விளையாடவுள்ளது.

### விராட் கோலி குறித்து டொனால்டு



தென்ஆப்பிரிக்க கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் ஆலன் டொனால்டு அளித்த ஒரு பேட்டியில், 'விராட் கோலி போன்று கிரிக்கெட் மீதான தீராத வேட்கை கொண்ட ஒரு வீரரை நான் பார்த்ததில்லை. அவர் மீது எனக்கு மிகுந்த மரியாதை உள்ளது. வீரர்களின் ஓய்வறையில் அவரிடம் ஒரு சாம்பியன் பயிற்சியாளராக இருப்பது பற்றி அடிக்கடி (ஐ.பி.எல். கிரிக்கெட்டில் பெங்களூரு அணியின் பந்துவீச்சு பயிற்சியாளராக இருந்த சமயத்தில்) உரையாடி இருக்கிறேன்.

அவரை போன்று மிகவும் கடினமாக பயிற்சி மேற்கொள்ளும் வீரர் யாரும் இல்லை. அவர் ஒரு எந்திரம் போன்றவர். டெஸ்ட் கிரிக்கெட்டில் அவரது ஆட்டத்தை நான் தவற விடுகிறேன். டெஸ்டில் இருந்து அவர் சீக்கிரமாக ஓய்வு பெற்று விட்டதாக நினைக்கிறேன். அதே சமயம் அடுத்த ஆண்டு நடக்கும் 50 ஓவர் உலகக்கோப்பை போட்டி களத்தில் நாம் அவரை பார்க்கலாம் என்பதில் சந்தேகமில்லை' என்றார்.

### பாக்., கிரிக்கெட் வாரியம் விருப்பம்

வங்க தேசத்தில் இந்துக்கள் மீதான தாக்குதல் சம்பவம் கிரிக்கெட்டிலும் எதிரொலித்து வருகிறது. ஐ.பி.எல். போட்டியில் கொல்கத்தா அணியில் இருந்து வங்காளதேச வீரர் முஸ்தாபிசுர் ரகுமான் நீக்கப்பட்டார். இதைத் தொடர்ந்து பாதுகாப்பு காரணமாக 20 ஓவர் உலக கோப்பையில் இந்தியாவில் விளையாட மாட்டோம் என்றும், தங்களது போட்டிகளை இலங்கைக்கு மாற்ற வேண்டும் என்றும் வங்க தேச கிரிக்கெட் வாரியம் வலியுறுத்தியது. இதை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) நிராகரித்தது. இந்தியாவில் விளையாடாவிட்டால் புள்ளிகளை இழக்க நேரிடும் என்று எச்சரித்தது. ஆனாலும் இலங்கையில்தான் தாங்கள் விளையாடுவோம் என்று 2-வது முறையாக வங்க தேசம் ஐ.சி.சி.யிடம் வேண்டுகோள் விடுத்து இருந்தது. இது குறித்து ஐ.சி.சி. இதுவரை எந்த முடிவையும் எடுக்கவில்லை.

இதற்கிடையே வங்க தேச அணி இந்தியாவில் விளையாடுவதற்கு ஏற்றவாறு சென்னை, ஐதராபாத் மாற்று இடமாக தேர்வு செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி இருந்தது. அந்த அணி கொல்கத்தாவில் 3 போட்டியிலும், மும்பையில் ஒரு ஆட்டத்திலும் விளையாட திட்டமிடப்பட்டு இருந்தது. இந்த நிலையில் 20 ஓவர் உலக கோப்பையில் வங்கதேச போட்டியை நடத்த தயாராக இருப்பதாக பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் தெரிவித்ததாக தகவல் வெளியாகி உள்ளது. இலங்கையில் போட்டி நடத்த முடியாவிட்டால் நாங்கள் நடத்த தயார் என்று பாகிஸ்தான் தனது விருப்பத்தை தெரிவித்துள்ளது.

## பொங்கல் பண்டிகைக்கு பிறகு மீண்டும்

# விஜயிடம் விசாரணை நடத்த சி.பி.ஐ. திட்டம்

**புதுடெல்லி, ஜன. 13-**
பொங்கல் பண்டிகைக்கு பின் மீண்டும் விஜயிடம் விசாரணை நடத்த சி.பி.ஐ. திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

கரூர் சம்பவம் தொடர்பாக இதுவரை பலரிடம் சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை நடத்தி விளக்கம் பெற்றுள்ள நிலையில் அதன அடிப்படையிலும் நேற்று பல கேள்விகளை விஜய்யிடம் கேட்டதாக கூறப்படுகிறது. இந்தநிலையில் டெல்லி சி.பி.ஐ. அலுவலகத்தில் ஆஜரான த.வெ.க. தலைவர் விஜய்யிடம் விசாரணை நிறைவு பெற்றுள்ளது.

சுமார் 7 மணி நேர விசாரணை முடிந்து சி.பி.ஐ. அலுவலகத்தில் இருந்து வெளியே வந்தார் விஜய். முன்னதாக டெல்லி சி.பி.ஐ. தலைமை அலுவலகத்தில் விசாரணை முடிந்தும் ஒன்றரை மணி நேரமாக தனியறையில் உட்கார வைக்கப்பட்டிருந்தார். விசாரணை விவரம் பதிவு செய்யப்பட்ட பேப்பரில் கையெழுத்திடுவதற்காக அவர் அமரவைக்கப்பட்டிருப்பதாக கூறப்பட்டது.

இந்தநிலையில், த.வெ.க. தலைவர் விஜய்யிடம் இன்று நடைபெறுவதாக இருந்த சி.பி.ஐ. விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது. விஜய்யின் கோரிக்கையை ஏற்று விசாரணையை சி.பி.ஐ. ஒத்திவைத்ததாக தகவல் வெளியாகி உள்ளது. நேற்று இரவு டெல்லியில் தங்கும் விஜய். இன்று சென்னை திரும்புவார் என த.வெ.க.வினர் தரப்பில் கூறப்படுகிறது. பொங்கல் பண்டிகைக்கு பின் மீண்டும் விஜய்யிடம் விசாரணை நடத்த சி.பி.ஐ. திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

## பிப்.1ம் தேதி மத்திய பட்ஜெட் தாக்கல்:

# பாராளுமன்ற மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா அதிகாரப்பூர்வ அறிவிப்பு

**டெல்லி, ஜன. 13-**
பிப்.1ம் தேதி மத்திய பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் என்று மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளார்.

மத்திய பட்ஜெட் ஆண்டுதோறும் பிப்ரவரி 1ம் தேதி பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில், 2026-27ம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட் பிப்ரவரி 1ம் தேதி பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்று மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா நேற்று அறிவித்துள்ளார்.

அதன்படி, பாராளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் 28ம் தேதி தொடங்குகிறது. பட்ஜெட் கூட்டத்தொடரின் தொடக்க நாளில் மக்களவை, மாநிலங்களவை உறுப்பினர்கள் சேர்ந்த கூட்டு அவை ஜனாதிபதி உரையுடன் தொடங்குகிறது. ஜனாதிபதி திரௌபதி முர்மு துவக்க உரையாற்றி பட்ஜெட் கூட்டத்தொடரை தொடங்கி வைக்கிறார். ஜனாதிபதி உரைக்குப்பின் நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் பொருளாதார ஆய்வறிக்கையை தாக்கல் செய்கிறார்.

இதனை தொடர்ந்து பிப்ரவரி 1ம் தேதி மத்திய பட்ஜெட்டை நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்கிறார். இதையடுத்து, பட்ஜெட் மீதான விவாதம் நடைபெற உள்ளது. பட்ஜெட் கூட்டத்தொடர் முதற்கட்டமாக பிப்ரவரி 13ம் தேதி வரை நடைபெறுகிறது. அதன்பின்னர், மீண்டும் மார்ச் 9ம் தேதி தொடங்கும் பட்ஜெட் கூட்டத்தொடர் ஏப்ரல் 2ம் தேதி வரை நடைபெற உள்ளது.

## ஆம்னி பேருந்துகளில்

# கூடுதல் கட்டண வசூல் எதிரொலி: புகார் எண்களை அறிவித்தது அரசு

**சென்னை, ஜன. 13-**
பொங்கல் பண்டிகையை யொட்டி ஆம்னி பேருந்துகளில் கூடுதல் கட்டணம் வசூலித்தால் பயணிகள் புகார் அளிக்க தமிழக அரசு அறிவுறுத்தியுள்ளது.

பொங்கல் பண்டிகையை யொட்டி சென்னை உள்ளிட்ட நகரங்களில் இருந்து மக்கள் தங்கள் சொந்த ஊருக்குச் செல்கின்றனர். ரயில்கள் நிரம்பி வழியும் நிலையில் ஆம்னி பேருந்துகளில் ஆயிரக்கணக்கில் கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுவதாக புகார் எழுந்துள்ளது. உதாரணமாக சென்னையில் இருந்து கோவைக்கு ரூ. 4,000, நெல்லைக்கு ரூ. 4,500 வரையிலும் வசூலிக்கப்படுகிறது. இந்த புகார் குறித்து தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர்கள் வலியுறுத்தினர்.

இதையடுத்து தமிழக அரசு புகார் எண்களை அறிவித்துள்ளது. இதுகுறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: பொங்கல் பண்டிகை மற்றும் தொடர் வார விடுமுறையை முன்னிட்டு (வரும் 18.01.2026 வரை) பொதுமக்கள் வெளியூர் பயணம் மேற்கொள்வதைப் பயன்படுத்தி தனியார் ஆம்னி பேருந்துகள் அதிகப்படியான கட்டணம் வசூல் செய்தால் அதனைத் தடுக்க தமிழ்நாடு முழுவதும் வட்டாரப்போக்குவரத்து அலுவலர்கள், மோட்டார் வாகன ஆய்வாளர்கள் மற்றும் போக்குவரத்து சோதனைச்சாவடி ஆய்வாளர்கள் ஆகியோரைக் கொண்டு சிறப்புக்குழு அமைக்கப்பட்டு அதிகப்படியான கட்டணம் வசூல் செய்யும் மற்றும் அனுமதிக்குப் புறம்பாக இயங்கும் ஆம்னி பேருந்துகளை தீவிரமாக சோதனை செய்து அபராதம் விதித்தும் வாகனங்களைச் சிறைபிடித்தும் வரி வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் பொதுமக்கள் அதிக அளவில் தங்களது சொந்த ஊருக்கு பயணம் மேற்கொள்ள இருப்பதால் ஆம்னி பேருந்துகளில் அதிக கட்டணம் வசூலிப்பதாக புகார் வருவதை தொடர்ந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள பொதுமக்கள் கீழ் காணும் எண்கள் மூலம் தொலைப்பேசி வாயிலாகவோ, வாட்ஸ் ஆப் மூலம் குறுஞ்செய்தி அல்லது குரல் பதிவாகவோ புகார் தெரிவிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு ஆணையரகம், சென்னை -1800 425 6151., இணைப்போக்குவரத்து ஆணையரகம், சென்னை (வடக்கு) - 99442 53404., இணைப்போக்குவரத்து ஆணையரகம், சென்னை (தெற்கு) - 97905 50052., இணைப்போக்குவரத்து ஆணையரகம், மதுரை - 90953 66394., இணைப்போக்குவரத்து ஆணையரகம், கோயம்புத்தூர் - 91235 93971., துணைப்போக்குவரத்து ஆணையரகம், விழுப்புரம் - 96773 98825., துணைப்போக்குவரத்து ஆணையரகம், வேலூர் - 98400 23011., துணைப் போக்குவரத்து ஆணையரகம், சேலம் - 78456 36423., துணைப்போக்குவரத்து ஆணையரகம், ஈரோடு - 80569 40040., துணைப்போக்குவரத்து ஆணையரகம், திருச்சிராப்பள்ளி - 90660 32343., துணைப்போக்குவரத்து ஆணையரகம், விருதுநகர் - 90257 23800., துணைப் போக்குவரத்து ஆணையரகம், திருநெல்வேலி - 96981 18011., துணைப்போக்குவரத்து ஆணையரகம், தஞ்சாவூர் - 95850 20865.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## கடந்த 8 மாதங்களில் 2-வது தோல்வி:

# பசிப்பிக் கடலில் விழுந்த 17 செயற்கைக்கோள்கள்

**ஸ்ரீஹரிகோட்டா, ஜன. 13-**
பி.எஸ்.எல்.வி. சி-62 நேற்று விண்ணில் செலுத்தப்பட்ட சில நிமிடங்களிலேயே தனது பாதையில் இருந்து விலகிச் சென்றதால் தோல்வியில் முடிந்ததாக அறிவிக்கப்பட்டது. மேலும் அனுப்பப்பட்ட 17 செயற்கைக்கோள்களும் பசிப்பிக் கடலில் விழுந்ததாக இஸ்ரோ தலைவர் நாராயணன் தெரிவித்துள்ளார். கடந்த 8 மாதங்களில் பி.எஸ்.எல்.வி. ராக்கெட்டின் 2-வது தோல்வி ஆகும்.

இந்த ஆண்டின் முதல் ராக்கெட்டான பி.எஸ்.எல்.வி. சி-62 நேற்று விண்ணில் செலுத்தப்பட்ட சில நிமிடங்களிலேயே தனது பாதையில் இருந்து விலகிச் சென்றதால் தோல்வியில் முடிந்ததாக அறிவிக்கப்பட்டது. இது இஸ்ரோ விஞ்ஞானிகளை மட்டுமின்றி, நாட்டு மக்களையும் சோகத்தில் ஆழ்த்தியது. ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் ஆய்வு மைய முதல் ஏவுதளத்தில் இருந்து காலை 10.18 மணிக்கு 18 செயற்கைக்கோளுடன் புறப்பட்ட பி.எஸ்.எல்.வி. சி62 ராக்கெட், 8-வது நிமிடத்தில் தனது பாதையில் இருந்து விலகிக் சென்றது.

இந்த ராக்கெட்டில் பிரதானமாக இஓஎஸ்-என் 1 (அன்விஷா) செயற்கைக் கோள் இருந்தது. மேலும், இந்தியா மற்றும் வெளிநாடுகளுக்கு சொந்தமான 17 சிறிய செயற்கைக்கோள்களும் இணைக்கப்பட்டிருந்தது. பிரதான செயற்கைக்கோளான இஓஎஸ்-என்1 தரையில் இருந்து 505 கி.மீ. தொலைவில் சூரிய ஒத்திசைவு சுற்றுப்பாதையில் நிலை நிறுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால், புறப்பட்ட 8-வது நிமிடத்தில் ராக்கெட்டின் 3-வது நிலையில் (பி.எஸ்.3) ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக உந்து விசை குறைந்ததால், குறிப்பிட்ட பாதையில் இருந்து ராக்கெட் விலகிச் சென்றது.

ராக்கெட்டில் இருந்த 18 செயற்கைக்கோள்களும் புவிஈர்ப்பு பகுதிக்குள்ளேயே அப்போது இருந்ததால், அனைத்தும் பசிப்பிக் பெருங்கடலில் விழுந்துவிட்டது. திட்டமும் தோல்வியில் முடிந்ததாக இஸ்ரோ தலைவர் நாராயணன் அறிவித்தார். ஏற்கனவே, கடந்த ஆண்டு ஏவப்பட்ட பி.எஸ்.எல்.வி. சி61 ராக்கெட்டும் இதே பிரச்சினையால் தோல்வியில் முடிந்தது குறிப்பிடத்தக்கது. கடந்த 8 மாதங்களில் பி.எஸ்.எல்.வி. ராக்கெட்டின் 2-வது தோல்வி இதுவாகும். இது பி.எஸ்.எல்.வி. ராக்கெட்டின் நம்பகத்தன்மை குறித்த சந்தேகங்களை ஏற்படுத்தி இருப்பதால் விண்வெளி பயண திட்டத்தில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடும்.

மழைத்துளி மண்ணின் உயிர்துளி

# சினிமா CINI செய்திகள்

## இந்த வாரம் வெளியாகிறது 'தலைவர் தம்பி தலைமையில்'



கண்ணன் ரவி குழுமம் சார்பில் தயாரிப்பாளர் கண்ணன் ரவி தயாரிப்பில், தீபக் ரவி இணை தயாரிப்பில் நடிகர் ஜீவா கதையின் நாயகனாக முதன்மையான கதாபாத்திரத்தில் நடித்திருக்கும் 'தலைவர் தம்பி தலைமையில்' படத்தின் முன்னோட்ட வெளியீட்டு விழா சென்னையில் நடைபெற்றது. நடிகை பிரார்த்தனா நாதன் பேசுகையில்:-

தலைவர் தம்பி தலைமையில் எனும் இந்தப் படம் எனக்கு ஸ்பெஷலானது. 2025 என்றால் எனக்கு இந்த படத்தின் நினைவுகள் தான் அதிகம். மேற்குத் தொடர்ச்சி மலையின் அருகில் ஒரு அருமையான இடத்தில் நாங்கள் அனைவரும் தங்கி இருந்தோம். 45 நாட்கள் படப்பிடிப்பு நடைபெற்றது. நிறைவடைந்த தருணத்தில் எனக்கு மகிழ்ச்சியாக இருந்து பிரிகிறோமே ..! என்ற கவலை தான் அதிகம் ஏற்பட்டது. அந்த அளவிற்கு அனைவரும் ஒரு குடும்பமாக ஒன்றிணைந்து சந்தோஷமாக பணியாற்றினோம். இந்தப் படத்தில் நான் சௌமியா எனும் கதாபாத்திரத்தில் மணப்பெண்ணாக நடித்திருக்கிறேன் என்றார்.

## 'ராஜா சாப்' திரைவிமர்சனம்



தாத்தாவை தேடி செல்லும் நாயகன் பிரபாஸ், பல்வேறு மாய வித்தைகளை கற்று தேர்ந்த பயங்கரமான மந்திரவாதி சஞ்சய் தத், தான் தனது தாத்தா என்பதை தெரிந்துக் கொள்கிறார். அதே சமயம் தனது தாத்தாவை நெருங்க முயற்சிக்கும் அவருக்கு பல திடுக்கிடும் உண்மைகள் தெரிய வருவதோடு, தாத்தாவுடன் மோத வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. ஏன் இந்த மோதல் ? , இதனால் பிரபாஸின் வாழ்வில் எத்தகைய சிக்கல்கள் ஏற்படுகிறது, அதில் இருந்து அவர் எப்படி மீண்டார்? என்பதை திகில், ஃபேண்டஸி உள்ளிட்ட அனைத்துவிதமான மசாலாவையும் கலந்து கொடுத்திருப்பதே 'ராஜா சாப்' படம்

'பாகுபலி' படத்திற்குப் பிறகு ஹாலிவுட் ஆக்ஷன் ஹீரோக்களின் பட்டியலில் இடம் பிடிப்பதற்கான முயற்சியாக பல பிரமாண்டமான ஆக்ஷன் படங்களில் நடித்து வந்த பிரபாஸ், அந்த படங்கள் அனைத்தும் தோல்வியை தழுவியதால், மீண்டும் தனது பழைய பாணியிலான மசாலாப் படத்தில் நடிக்க முடிவு செய்து இதில் நடித்திருக்கிறார். பிரபாஸுக்கு ஏகப்பட்ட பில்டப் கொடுக்கப்பட்டிருந்தாலும், அவை அனைத்தும் எடுபடமால் போயிருப்பதோடு, திரைக்கதையின் ஓட்டத்திற்கு வேகத்தடை போலவும் அமைந்திருக்கிறது.

எழுதி இயக்கியிருக்கும் மாருதி, தொடர்ந்து ஆக்ஷன் படங்களில் நடித்து உடல் வலியால் சோர்வடைந்திருக்கும் பிரபாஸுக்கு, மூன்று நாயகிகளை வைத்து ஒத்தடம் கொடுக்கும் வேலையை செய்திருக்கிறார். காதல், காமெடி, கவர்ச்சி, திகில், கற்பனை என்று கமர்ஷியல் படங்களுக்கு தேவையான அனைத்து விசயங்களும் படத்தில் இருந்தாலும், அவை எதுவுமே ரசிக்கும்படி இல்லாது படத்திற்கு பெரும் பலவீனம். மொத்தத்தில் இந்த 'ராஜா சாப்' ஒரு முறை பார்க்கலாம்.

## 'பராசக்தி' திரை விமர்சனம்



இந்தி திணிப்புக்கு எதிராக போராடும் மாணவர் அமைப்பை தலைமை தாங்கி வழிநடத்தும் சிவகார்த்திகேயன், தனது தோழனின் இழப்பால் போராட்டத்தை கைவிடுகிறார்.

சில வருடங்களுக்குப் பிறகு கல்லூரியில் படிக்கும் சிவகார்த்திகேயனின் தம்பி அதர்வா, இந்தி திணிப்புக்கு எதிராக தனது கல்லூரி தோழர்களுடன் இணைந்து பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு வருகிறார். தம்பியின் செயலை கண்டு கவலைக் கொள்ளும் சிவகார்த்திகேயன், அவரை கண்டிக்கிறார்.

இதற்கிடையே, போராட்டங்களை கட்டுப்படுத்தி, போராட்டக்காரர்களை வேறோடு அழிப்பதற்காக மத்திய அரசால் நியமிக்கப்படும் ஐபிஎஸ் அதிகாரியான ஜெயம் ரவி, தனது பணியில் வெறித்தனமாக செயல்படுகிறார்.

இந்த நிலையில், மத்திய அரசின் இந்தி திணிப்பு கொள்கையினால் தமிழர்கள் பல்வேறு வகையில் பாதிக்கப்படுகிறார்கள். சிவகார்த்திகேயனும் இந்தி மொழியால் தனிப்பட்ட முறையில் பாதிக்கப்படுகிறார். மறுபக்கம் அவரது தம்பி அதர்வா மற்றும் அவரது நண்பர்கள் இந்தி திணிப்புக்கான தங்களது போராட்டங்களை தீவிரப்படுத்த, அண்ணன் சிவகார்த்திகேயன் என்ன செய்தார், என்பதை உணர்வுப்பூர்வமாக சொல்வதே 'பராசக்தி' திரைப்படம்.

''மொழி என்பது வெறும் வார்த்தைகள் அல்ல, அது ஒருவரது அடையாளம்'' என்பதையும், அந்த மொழியை காக்க எத்தகைய போராட்டங்களை வழிநடத்தியிருக்கிறார்கள் என்பதையும், காட்சி மொழியின் மூலம் மிக சிறப்பாக சொல்லியிருக்கும் இயக்குநர் சுதா கொங்குரா, சித்தரிக்கப்பட்ட காட்சிகள் மூலம் இந்தி திணிப்பின் பாதிப்பை அனைத்து மக்களும் எளிமையான முறையில் புரிய வைத்திருக்கிறார். தணிக்கை குழு பல இடங்களில் கட் மற்றும் மியூட் கொடுத்திருந்தாலும் அவை இயக்குநரின் கருத்தீயலை எந்த வகையிலும் பாதிக்காமல், அவர் என்ன சொல்ல நினைத்தாரோ, மக்களுக்கு எதை புரிய வைக்க முயற்சித்தாரோ, அதை முழுமையாக செய்திருக்கிறார். மொத்தத்தில் 'பரசாக்தி' அனைத்து மக்களும் பார்க்க வேண்டிய படம்.

## தாய் நாட்டுக்கு ஒரு படம் தமிழ்நாட்டுக்கு ஒரு படம்
### சிவகார்த்திகேயன் பேட்டி



சிவகார்த்திகேயன் நடிப்பில் சுதா கொங்காரா இயக்கத்தில், ஆகாஷ் பாஸ்கரன் தயாரிப்பில் உலகம் முழுவதும் சமீபத்தில் வெளியான படம் பராசக்தி.

இந்தப் படத்தில் நடித்துள்ளது பற்றி தனது அனுபவங்களை சிவகார்த்திகேயன் பகிர்ந்து கொண்டார், "'பராசக்தி' கதையுடன் சுதா கொங்காரா என்னை அணுகிய போது கலவையான உணர்வுகள் எனக்குள் இருந்தது. இந்தப் படத்தில் நடிக்கப் போகிறோம் என்ற உற்சாகம் இருந்தாலும், அவரது அற்புதமான திரைக்கதைக்கு நான் நியாயம் செய்ய முடியுமா என்ற சந்தேகமும் இருந்தது. படத்தின் ஒவ்வொரு காட்சியையும் மிகுந்த பொறுப்புணர்வுடன் அணுகினேன். என் வழக்கமான இமேஜைத் தாண்டி, வேறொரு பரிமாணத்தை வெளிப்படுத்த வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தேன்.

இயக்குநராக சுதா கொங்காரா என்னிடமிருந்து சிறந்த நடிப்பை வெளிக்கொண்டு வந்திருக்கிறார். ரசிகர்களும் அதை முழுமையாக ஏற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை உள்ளது.

ரவி மோகன் இந்தத் திரைப்படத்தில் நடிக்க ஒப்புக்கொள்வார் என எதிர்பார்க்கவே இல்லை. செட்டில் அனைவரிடமும் எளிமையாகவும் அன்பாகவும் நடந்து கொண்டார். நீண்ட காலமாக அவரை திரையில் பார்த்து ரசித்திருக்கிறேன். ஆனால், நேரில் அவரின் பணிவும் நேர்மறை அணுகுமுறையும் எனக்கு பெரும் உற்சாகம் கொடுத்தது. இந்தப் படத்தில் அதர்வா முரளியின் நடிப்பு அவரது ரசிகர் வட்டத்தை இன்னும் அதிகமாக்கும். ஸ்ரீலீலாவுடன் இணைந்து நடித்தது மகிழ்ச்சி. நம் இந்திய வரலாற்றில் அழியாத ஒரு அத்தியாயத்தை உருவாக்கிய தமிழ்நாட்டு இளைஞர்களின் தைரியமும் தியாகமும்தான் 'பராசக்தி'. இந்த படம் சிறப்பான முழுமையான சினிமா அனுபவத்தை பார்வையாளர்களுக்கு கொடுக்கும். அமரன் படம் தாய் நாட்டுக்காகவும். பராசக்தி படம் தமிழ்நாட்டுக்காகவும் செய்திருக்கிறேன் என்று மகிழ்ச்சியாக கூறினார்.

## பாலமேடு ஜல்லிக்கட்டில் கார், டிராக்டர், நாட்டு பசு மாடு பரிசு



**அலங்காநல்லூர், ஜன. 13 -**

உலகப்புகழ் பெற்ற பாலமேடு ஜல்லிக்கட்டுவிழா வருகின்ற 16-ந் தேதி வெள்ளிக்கிழமை மாட்டுப்பொங்கல் அன்று நடைபெற உள்ளது. இதையொட்டி ஜல்லிக்கட்டு விழா ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெற்று வருகிறது. இந் நிலையில் பாலமேடு கிராம பொது மகாலிங்க சுவாமி கமிட்டியின் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு மடத்து கமிட்டி தலைவர் மச்சவேல் தலைமை தாங்கினார். செயலாளர் பிரபு, பொருளாளர் கார்த்திக் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கமிட்டியின் நிர்வாகிகள் உடனிருந்தனர். கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அதன் பின்னர் நிருபர்களிடம் அளித்த பேட்டியில் மகாலிங்க சுவாமி மடத்து கமிட்டியினர் கூறியதாவது. வழக்கத்தை போலவே இந்த ஆண்டும் பாலமேடு ஜல்லிக்கட்டு விழா அரசு வழிகாட்டுதலுடன் மாவட்ட நிர்வாகத்தின் ஆலோசனைப்படி சிறப்பாக நடைபெறும். இந்த ஆண்டு நடைபெறும் ஜல்லிக்கட்டு போட்டியை தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைக்க உள்ளார். எனவே அதற்கான சிறப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகிறது.

இதில் சிறந்த காளைக்கு முதல் பரிசாக டிராக்டர் மற்றும் இரண்டாம் பரிசாக கன்று குட்டியுடன் நாட்டு பசுமாடும் வழங்கபடும். சிறந்த மாடுபிடி வீரருக்கு முதல் பரிசாக ஒரு கார் மற்றும் இரண்டாம் பரிசாக ஒரு பைக் வழங்கப்படும்,. மேலும் போட்டியில் பங்கேற்று வெற்றி பெறும் சிறந்த காளைகள், மாடுபிடி வீரர்களுக்கு தங்கம், வெள்ளி நாணயங்கள், அண்டா முதல் சைக்கிள், பீரோ, பிரிட்ஜ், டிவி, கட்டில், உள்ளிட்ட பல்வேறு வீட்டு உபயோக பொருட்களும் பரிசுகளும் இந்த ஆண்டும் வழங்கப்படும். நடைபெற உள்ள ஜல்லிக்கட்டில் 900 முதல் 1000 காளைகள் வரை வாடிவாசலில் அவிழ்த்து விடப்படும். காலை 7 மணிக்கு தொடங்கி மாலை 5 மணி வரை ஜல்லிக்கட்டு போட்டி நடத்தப்படும். முதலில் கிராம கரை மாடுகள் அவிழ்த்து விடப்படும். அதன் பின் மற்ற காளைகள் வரிசையாக அவிழ்த்து விடப்படும். சென்ற ஆண்டை போலவே இந்த ஆண்டும் ஆன்லைன் மூலம் மட்டுமே பதிவுசெய்து தகுதி பெற்ற மாடுபிடி வீரர்கள், காளை உரிமையாளர்களுக்கு டோக்கன் வழங்கப்படுகிறது. டோக்கனில் குறிப்பிட்டுள்ள நம்பர் படியே வாடிவாசலில் காளைகள் அவிழ்த்து விடப்படும். இந்த ஆண்டு எவ்வித இடையூறும் இன்றி தமிழக அரசின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் உட்பட்டு ஜல்லிக்கட்டு சிறப்பாக நடைபெறும். பாலமேடு பேரூராட்சியின் ஒத்துழைப்போடு சுகாதாரம், குடிநீர், வசதிகள், ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.மேலும் இந்த ஆண்டு பார்வையாளர்கள் அமரும் கேலரி அமைக்கப்பட்டுள்ளது.தவிர வெளி மாவட்டங்களில் இருந்து வரும் பார்வையாளர்களுக்கு ஆங்காங்க அடிப்படை வசதி தேவைகளை பாலமேடு மகாலிங்க சுவாமி மடத்து கமிட்டி நிர்வாகம் செய்து வருகிறது. மாவட்ட நிர்வாகம் அறிவிக்கும் நேரத்திற்குள் ஜல்லிக்கட்டை சிறப்பாக நடத்தி முடிக்க உள்ளோம். எனதீர்மானம் நிறைவேற்றியுள்ளோம். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## நத்தத்தில் தவறி விழுந்து கொத்தனார் உயிரிழப்பு

**நத்தம், ஜன. 13-**

மதுரை- தல்லாகுளம் பகுதியை சேர்ந்தவர் ஜீவா(45). கொத்தனார். இவர் கடந்த 7-ம் தேதி நத்தம் எம்.ஜி.ஆர் நகர் பகுதியில் புதிதாக கட்டப்பட்டு வரும் கட்டிடத்தில் வெளிப்புற சுவரில் சாரத்தில் நின்று கொண்டு வேலை பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது எதிர்பாராத விதமாக கால் வழுக்கி தடுமாறி கீழே விழுந்தார். இதில் அவருக்கு தலை, கை, கால்களில் பலத்த காயம் ஏற்பட்டது.

ஆபத்தான நிலையில் இருந்த ஜீவாவை அக்கம் பக்கத்தினர் மீட்டு நத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர்.பின்னர் அவர் மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.ஆனால் அங்கு சிகிச்சை பலனில்லாமல் ஜீவா நேற்று முன்தினம் இறந்து விட்டார். இச்சம்பவம் குறித்து போலீஸ்-சப்-இன்ஸ்பெக்டர் அருண்நாராயணன் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.



சென்னை, அ.தி.மு.க. தலைமை கழகத்தில் நேற்று பொதுச்செயலாளர் எடப்பாடி கே. பழனிசாமி தலைமையில் நடைப்பெற்ற நேர்காணல் நிகழ்வில் பங்கேற்ற முன்னாள் அமைச்சர் கே.டி.ராஜேந்திர பாலாஜி பூங்கொத்து கொடுத்து வரவேற்றார்.



மதுரை மாநகராட்சி மண்டலம் 3-வது வார்டு எண்.50 சிம்மக்கல் ஆதிமூலம் மாநகராட்சி தொடக்கப்பள்ளியில் புதிதாக கட்டப்பட்டுள்ள வகுப்பறை கட்டிடங்களை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் திறந்து வைத்தார். உடன் ஆணையாளர் சித்ரா, கல்விக்குழு தலைவர் ரவிச்சந்திரன், துணை ஆணையளர் ஜெய்னுலாபுதீன், கல்வி அலுவலர் மோகன் மாமன்ற உறுப்பினர் இந்திராகாந்தி மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.

### சட்டசபை தேர்தலுக்கான அ.தி.மு.க. தேர்தல் அறிக்கை
## தமிழ்நாடு மக்களின் எண்ணங்களை பிரதிபலிக்கும் வகையில் இருக்கும்
### மதுரையில் முன்னாள் அமைச்சர் நத்தம் இரா.விசுவநாதன் உறுதி




**மதுரை, ஜன. 13-**

வரும் சட்டசபை தேர்தலுக்கான அ.தி.மு.க. தேர்தல் அறிக்கை தமிழ்நாடு மக்களின் எண்ணங்களை பிரதிபலிக்கும் வகையில் இருக்கும் என்று மதுரையில் முன்னாள் அமைச்சர் நத்தம் இரா.விசுவநாதன் தெரிவித்தார்.

தமிழ் நாட்டில் 17-வது சட்டமன்றப் பேரவைக்கான பொதுத் தேர்தல் விரைவில் நடைபெற உள்ளதை முன்னிட்டு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், மக்களுக்கு பல்வேறு வகைகளில் நலம் பயக்கும் வகையிலான தேர்தல் அறிக்கையினை தயார் செய்வதற்காக, அ.தி.மு.க. சார்பில் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு ஒவ்வொரு மண்டலமாக நேரில் சென்று கோரிக்கைகளை பெற்று வருகிறது.

இதனைத் தொடர்ந்து மதுரை மண்டலத்துக்கு உட்பட்ட மதுரை, திண்டுக்கல், தேனி ஆகிய மாவட்டங்களுக்கு சேம்பர் ஆப் காமர்ஸ் அரங்கத்தில் நடைபெற்றது. இதில் கழக துணைப் பொதுச் செயலாளர் திண்டுக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் நத்தம் இரா.விசுவநாதன், அனைத்துலக எம்.ஜி.ஆர். மன்றச் செயலாளர் கழக செய்தித்தொடர்பாளர் சி.பொன்னையன்,கழக தேர்தல் பிரிவுச் செயலாளர்,திருப்பூர் மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் பொள்ளாச்சி வி. ஜெயராமன், கழக அமைப்புச் செயலாளர் வட சென்னை தெற்கு (கிழக்கு) மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர் டி. ஜெயக்குமார்,கழக அமைப்புச் செயலாளர், விழுப்புரம் மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர்சி. வி.சண்முகம், கழக அமைப்புச் செயலாளர் முன்னாள் அமைச்சர் செ. செம்மலை,கழக மகளிர் அணிச் செயலாளர் கழக செய்தித் தொடர்பாளர், முன்னாள் அமைச்சர்பா. வளர்மதி,கழக அமைப்புச் செயலாளர் கழக புரட்சித் தலைவி பேரவைச் செயலாளர் மதுரை புறநகர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத் தலைவர், முன்னாள் அமைச்சர்ஆர்.பி.உதயகுமார், கழக இலக்கிய அணிச் செயலாளர் கழக செய்தித் தொடர்புச் செயலாளர், முன்னாள் அமைச்சர் எஸ்.எஸ். வைகைச்செல்வன் ஆகியோரிடம்சிறு குறு நடுத்தர முதலீட்டாளர்கள், வர்த்தக சங்கங்கள், பல்வேறு சங்கங்கள், அரசு ஊழியர்கள், ,தனியார் நிறுவனங்கள் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள், தொழிற்சங்கங்கள் ,பொதுமக்கள் மனுக்களை வழங்கினர்.இந்த நிகழ்ச்சியின் ஏற்பாடுகளை மதுரை மாநகர் மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செல்லூர் கே.ராஜூ, சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத் தலைவர் ஆர்.பி.உதயகுமார், மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் வி.வி. ராஜன் செல்லப்பா, தேனி மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் எஸ்.டி.கே.ஜக்கையன், தேனி கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் முறுக்கோடை ராமர் ஆகியோர் ஏற்பாட்டினை செய்தனர்.

கழக ரீதியில் உள்ள 7 மாவட்டங்களை சேர்ந்த 55 மேற்பட்ட சங்கங்கள் மற்றும் விவசாயிகள் பொதுமக்கள் அரசு ஊழியர்கள் பலர் பங்கேற்று தங்கள் கோரிக்கையை மனுவாக அளித்தனர்

இதில் முன்னாள் அமைச்சர் நத்தம் இரா.விசுவநாதன் பேசியதாவது-

பொதுச் செயலாளர் எடப்பாடியாரின் ஆணைக்கிணங்க, 2026 ஆண்டில் நடைபெறும் 17 வது சட்டமன்ற தேர்தலுக்காக தமிழக முழுவதும் அனைத்து மக்களிடத்தில் குறைகளை, கோரிக்கைகளை தரவுகளைப் பெற்று தேர்தல் அறிக்கையாக வெளியிடப்படுகிறது.இந்த தேர்தல் அறிக்கை என்பது அனைத்து சங்கங்களும், அரசு ஊழியர்கள் பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரிடம் எழுத்து மூலம் கோரிக்கை மனுக்களாக பெற்று மக்கள் விரும்பும் வகையில் தேர்தல் அறிக்கைகளை எடப்பாடியார் வெளியிடுகிறார் .கடந்த சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. 525 வாக்குறுதிகளை வெளியிட்டது.

இந்த தேர்தல் அறிக்கை என்பது மக்கள் எண்ணங்களை பிரதிபலிக்கும் வகையில் அமையும் இந்த தேர்தல் அறிக்கை வரலாற்று முக்கியத்துவமாக இடம் பெறும் இந்த தேர்தல் அறிக்கை என்பது மக்களுக்கு பயன்பாடும் வகையில் அமையும். இந்த தேர்தல் அறிக்கை மக்களுக்கு தாகத்தை ஏற்படுத்தும் வகையில் அமையும்.2021 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. அளித்த தேர்தல் வாக்குறுதியை சரிவர நிறைவேற்றவில்லை. அ.தி.மு.க. தேர்தல் அறிக்கை மக்கள் எண்ணங்களை பிரதிபலிக்கும் வகையில் அமையும். இவ்வாறு அவர் பேசினார்.



சாலைப்பாதுகாப்பு மாதத்தினை முன்னிட்டு மதுரை காளவாசல் பகுதியில் திலகர் திடல் போக்குவரத்து காவல் ஆய்வாளர் தங்கமணி தலைமையில் அண்ணா பல்கலைகழக மாணவர்கள், பேராசிரியர்கள் இணைந்து பொதுமக்களுக்கும், வாகன ஓட்டிகளுக்கும் துண்டு பிரசுரம் வழங்கியும், போக்குவரத்து விழிப்புணர்வு பதாகைகளுடன் சாலை பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இதில் பேராசிரியர் முத்துவேலாயுதம் மற்றும் சார்பு ஆய்வாளர் சந்தனகுமார் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.




முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று, தலைமைச்செயலகத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி தூய்மைப்பணியாளர் பத்மா நேற்று சென்னை, தியாகராய நகர், வண்டிக்காரன் சாலையில் தூய்மைப்பணியில் ஈடுபட்டிருந்தபோது கண்டெடுத்த 45 சவரன் தங்க நகைகளை பாண்டிபஜார் காவல் நிலையத்தில் ஒப்படைத்து, பிறருக்கு முன்னுதாரணமாக திகழ்ந்ததை பாராட்டி, அவருக்கு சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்து, பரிசுத்தொகையாக ரூபாய் ஒரு லட்சத்திற்கான காசோலையினை வழங்கினார். இந்நிகழ்வின்போது இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சென்னை மேயர் ஆர்.பிரியா, தலைமைச்செயலாளர் முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் நேற்று நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற அயலகத் தமிழர் தினம் 2026 விழாவில், அயல்நாடுகளில் மாணவர்களுக்கான கல்வி மற்றும் வேலைவாய்ப்பு நகர்வு, மொழி பயிற்சி மற்றும் வெளிநாடுகளில் பணியமர்த்தல் சேவைகள் வழங்குவதற்காக ஓ.எம்.சி.எல் மற்றும் வேலூர் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் (வி.ஐ.டி.) இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர் உள்ளிட்ட அமைச்சர்கள், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச்செயலாளர் முருகானந்தம், பொதுத் துறை செயலாளர் ரீட்டா ஹரீஷ் தக்கர், ஓ.எம்.சி.எல். தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் பாலசுப்பிரமணியம், வி.ஐ.டி. பல்கலைக்கழக நிறுவனர் - வேந்தர் ஜி.விஸ்வநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### பொங்கல் பண்டிகையை முன்னிட்டு

# கடந்த 3 நாட்களில் மட்டும் அரசு பேருந்துகளில் 3.58 லட்சம் பேர் பயணம்

**சென்னை, ஜன. 13-**

பொங்கல் பண்டிகையொட்டி கடந்த 9-ம் தேதி முதல் நேற்று முன்தினம் வரை இயக்கப்பட்ட 8,270 பேருந்துகளில் (முன்பதிவு, முன்பதிவில்லாத) 3.58 லட்சம் பொதுமக்கள் பயணம் செய்துள்ளனர்.

தமிழர் திருநாளை கொண்டாட சென்னை உள்ளிட்ட நகரங்களில் வசிக்கும் பெரும்பாலானவர்கள் சொந்த ஊருக்கு குடும்பத்துடன் செல்வது வழக்கம். இதற்கான ரெயில் டிக்கெட் முன்பதிவு தொடங்கிய சில நிமிடங்களிலேயே அனைத்து டிக்கெட்டுகளும் முன்பதிவாகிவிட்டன. ரெயில் போக்குவரத்துக்கு அடுத்தபடியாக விலை மலிவான போக்குவரத்து என்று பார்த்தால் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பஸ்கள்தான். பொங்கல் பண்டிகையையொட்டி தமிழக அரசு சார்பில் வழக்கமாக இயங்கும் பஸ்களுடன் 38 ஆயிரத்து 175 சிறப்பு பஸ்கள் இயக்குவதற்கு திட்டமிடப்பட்டு உள்ளன. இந்த நிலையில், பொங்கல் பண்டிகையொட்டி கடந்த 9-ம் தேதி முதல் நேற்று முன்தினம் வரை இயக்கப்பட்ட 8,270 பேருந்துகளில் (முன்பதிவு, முன்பதிவில்லாத) 3.58 லட்சம் பொதுமக்கள் பயணம் செய்துள்ளனர். பொதுமக்களின் தேவை யை கருதி தேவைக்கேற்ப கூடுதல் பேருந்துகள் இயக்கப்படும் என அரசுப் போக்குவரத்துக்கழகம் தெரிவித்துள்ளது. சென்னையில் இருந்து சொந்த ஊர்களுக்குச் செல்ல இதுவரை 2 லட்சத்து 38 ஆயிரத்து 535 பேர் முன்பதிவு செய்துள்ளனர்.

# வைகோவின் சமத்துவ நடைபயணம் நிறைவு

**மதுரை, ஜன. 13-**

வைகோவின் சமத்துவ நடைபயணம் நேற்றுடன் நிறைவு பெற்றது.

போதைப்பொருள் ஒழிப்பு, சாதி, மத மோதல் தடுப்பு உள்ளிட்டவற்றை வலியுறுத்தி, ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, கடந்த 2-ந்தேதி சமத்துவ நடைபயணத்தை திருச்சியில் தொடங்கினார். நடைபயணத்தின் நிறைவு விழா நேற்று (திங்கட்கிழமை) மாலை மதுரையில் நடந்தது.

இதற்கிடையே, உத்தங்குடி பகுதியில் வைகோ நிருபர்களிடம் கூறியதாவது:-

"வருகிற தேர்தலில் தி.மு.க. தனிபெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும். மீண்டும் திராவிட மாடல் ஆட்சி அமைந்து, மு.க.ஸ்டாலின் முதல்- அமைச்சராக தமிழகத்தை வழிநடத்துவார். ஜனநாயக நாட்டில் யார் வேண்டுமானாலும், எதை பற்றி வேண்டுமானாலும் பேசலாம். அதனால், கூட்டணியிலும் பங்கு, ஆட்சியிலும் பங்கு என பேசுகிறார்கள். ஆனால், அந்த கருத்தில் எங்களுக்கு உடன்பாடில்லை. நாங்கள் அந்த மாதிரியான நிபந்தனைகளை முன்வைக்கவில்லை, வைக்கப்போவதும் இல்லை. கூட்டணி பேச்சு வார்த்தை தொடங்கிய பின்னர் எத்தனை தொகுதிகளில் போட்டி என்பதை அறிவிப்போம். இவ்வாறு அவர் கூறினார்.



சென்னை கலைவாணர் அரங்க வளாகத்தில், கல்லூரி மாணவர்களின் திறன் வளர்ச்சி - டிஜிட்டல் முன்னேற்றத்திற்காக தொடங்கப்பட்ட 'உலகம் உங்கள் கையில்' திட்டத்தின் கீழ், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கினார். இந்நிகழ்வில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் வைத்திநாதன், செய்தி மக்கள் தொடர்புத்துறை கூடுதல் இயக்குநர் பாஸ்கரன், இணை இயக்குநர் / முதல்வர் மேகவர்ணம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் வரும் சட்டமன்ற தேர்தலில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிட விருப்பமனு அளித்தவர்களிடம் நேற்று 3-வது நாளாக நேர்காணல் நடத்தினார். இந்நிகழ்வில் முன்னாள் அமைச்சர்கள் கே.பி.முனுசாமி, திண்டுக்கல் சீனிவாசன், எஸ்.பி.வேலுமணி, ராஜேந்திர பாலாஜி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### குஜராத்தில் சர்வதேச காற்றாடி திருவிழா:

# பிரதமர் மோடி, ஜெர்மனி பிரதமர் இணைந்து தொடங்கி வைத்தனர்

**அகமதாபாத், ஜன. 13-**

குஜராத் மாநிலம், அகமதாபாத்தில் சர்வதேச காற்றாடி திருவிழாவை பிரதமர் நரேந்திர மோடியும், ஜெர்மனி பிரதமர் ஃப்ரீட்ரிக் மெர்ஸும் இணைந்து தொடக்கி வைத்தனர்.

மகர சங்கராந்தியை முன்னிட்டு சபரிமதி ஆற்றங்கரையில் மூன்று நாள்கள் நடைபெறும் சர்வதேச காற்றாடி திருவிழா நேற்று காலை தொடங்கியது. இந்த திருவிழாவை பிரதமர் நரேந்திர மோடியும், ஜெர்மனி பிரதமர் ஃப்ரீட்ரிக் மெர்ஸும் இணைந்து பட்டம்விட்டு தொடக்கிவைத்தனர். இந்த விழாவில், 50 நாடுகளைச் சேர்ந்த 135 சர்வதேசப் பட்டம் விடும் ஆர்வலர்கள் பங்கேற்கின்றனர். இவர்களுடன், இந்தியாவின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 65 பேரும், குஜராத்தைச் சேர்ந்த 871 உள்ளூர் பங்கேற்பாளர்களும் கலந்துகொண்டுள்ளனர்.

முன்னதாக, இந்தியாவுக்கு இரண்டு நாள்கள் அரசு முறைப் பயணமாக வருகை தந்துள்ள ஜெர்மனி பிரதமர் ஃப்ரீட்ரிக் மெர்ஸை சபர்மதி ஆசிரமத்தில் நேற்று காலை பிரதமர் மோடி வரவேற்றார். இருவரும் மகாத்மா காந்திக்கு மரியாதை செலுத்திய பிறகு, அங்குள்ள பார்வையாளர்கள் கையேட்டில் கையொப்பமிட்டனர். அகமதாபாத்தில் நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்ட பிறகு ஜெர்மனி பிரதமர் பெங்களூருக்கு சென்றார்.

### கரூர் கூட்ட நெரிசல் சம்பவம்:

# டெல்லி சி.பி.ஐ. அலுவலகத்தில் த.வெ.க. தலைவர் விஜய் ஆஜர்

## 7 மணி நேரம் தொடர் விசாரணை

**டெல்லி, ஜன. 13-**

கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பான விசாரணைக்கு நேற்று டெல்லி சி.பி.ஐ. அலுவலகத்தில் நேரில் ஆஜரான த.வெ.க. தலைவர் விஜய்யிடம் சி.பி.ஐ. அதிகாரிகள் 7 மணி நேரம் தொடர் விசாரணை நடத்தியதாக தகவல் வெளியாகியுள்ளது.

த.வெ.க. தலைவர் விஜய் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 27-ந்தேதி கரூரில் தேர்தல் பிரசாரம் மேற்கொண்டார். அப்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் பலியானார்கள். இந்த சம்பவம் தமிழ்நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்த சம்பவம் தொடர்பாக சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகிறார்கள். இந்த விசாரணையை ஓய்வு பெற்ற நீதிபதி அஜய் ரஸ்தோகி தலைமையிலான குழுவினர் கண்காணித்து வருகிறார்கள்.

இந்த நிலையில் கரூர் சம்பவம் தொடர்பாக சி.பி.ஐ. அதிகாரிகள் தற்போது விசாரணையை தீவிரப்படுத்தி உள்ளனர். கடந்த மாதம் த.வெ.க. பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த், தேர்தல் மேலாண்மை பிரிவு பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜுனா, கட்சியின் இணை பொதுச்செயலாளர் நிர்மல்குமார், கரூர் மாவட்ட செயலாளர் மதியழகன் ஆகியோரிடம் விசாரணை நடத்தினார்கள்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு டெல்லியில் உள்ள சி.பி.ஐ. அலுவலகத்தில் புஸ்சி ஆனந்த், ஆதவ் அர்ஜுனா ஆகியோர் நேரில் ஆஜரானார்கள். அங்கு சி.பி.ஐ. அதிகாரிகள் கேட்ட கேள்விகளுக்கு அவர்கள் விளக்கம் அளித்தனர். இந்த நிலையில் கரூரில் 41 பேர் பலியான சம்பவம் தொடர்பாக த.வெ.க. தலைவர் விஜய்யிடம் விசாரணை நடத்த சி.பி.ஐ. அதிகாரிகள் முடிவு செய்தனர். இதற்காக அவருக்கு சம்மன் அனுப்பினார்கள். அதில் 12-ம் தேதி (நேற்று) காலை 11 மணிக்கு டெல்லியில் உள்ள சி.பி.ஐ. அலுவலகத்தில் நேரில் ஆஜராக வேண்டும் என்று கூறப்பட்டு இருந்தது.

இதையடுத்து த.வெ.க. தலைவர் விஜய் டெல்லியில் உள்ள சி.பி.ஐ. அலுவலகத்தில் நேற்று விசாரணைக்கு நேரில் ஆஜரானார். இதற்காக விஜய் நேற்று காலை 6.20 மணியளவில் சென்னை நீலாங்கரை இல்லத்தில் இருந்து காரில் புறப்பட்டு சென்னை விமான நிலையத்துக்கு சென்றார். காலை 7.10 மணியளவில் அவர் சென்னை விமான நிலையத்தை வந்தடைந்தார்.

சென்னை பழைய விமான நிலையத்தில் 6-ம் எண் நுழைவு வாயிலில் வந்து இறங்கிய விஜய்யை மத்திய விமான பாதுகாப்பு படையினர் விமானம் நிறுத்தப்பட்டு இருந்த இடம் வரை பாதுகாப்பாக அழைத்து சென்றனர். அவர் விமான நிறுவனத்தின் காரில் ஏறி தனி விமானம் நிற்கும் பகுதிக்கு சென்றார். விஜய்க்கு ஏற்கனவே 'ஒய்' பிரிவு பாதுகாப்பு இருக்கும் நிலையில் விமான நிலையத்திலும் அவருக்கு கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன.

பின்னர் தனி விமானம் மூலம் விஜய் காலை 7.40 மணிக்கு டெல்லிக்கு புறப்பட்டு சென்றார். அவருடன் தனி விமானத்தில் த.வெ.க. தேர்தல் மேலாண்மை பிரிவு பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜுனா, கட்சியின் இணை பொதுச்செயலாளர் நிர்மல்குமார், இணை பொருளாளர் ஜெகதீஷ் பழனிசாமி, உதவியாளர் சி.ராஜேந்திரன், விஷ்ணு ரெட்டி, பாதுகாப்பு அதிகாரி நயீம் ஆகியோரும் உடன் சென்றனர்.

டெல்லிக்கு தனி விமானத்தில் சென்ற விஜய், பின்னர் டெல்லி விமான நிலையத்தில் இருந்து காரில் புறப்பட்டு ஐ.டி.சி. மவுரியா ஓட்டலுக்கு சென்றார். பின்னர் அங்கிருந்து அவர் தயாராகி மீண்டும் காரில் புறப்பட்டார். அங்கிருந்து சுமார் அரை மணி நேரம் காரில் பயணம் செய்து அவர் சி.பி.ஐ. அலுவலகத்தை அடைந்தார். அதன்பிறகு அவர் சி.பி.ஐ. அதிகாரிகள் முன்பு விசாரணைக்கு ஆஜரானார். அவரிடம் சி.பி.ஐ. அதிகாரிகள் பல்வேறு கேள்விகளை கேட்டு சுமார் 7 மணி நேரம் தொடர் விசாரணை நடத்தியதாகவும், குறிப்பாக விசாரணையின் போது 80-க்கும் மேற்பட்ட கேள்விகளை சி.பி.ஐ. அதிகாரிகள் கேட்டதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. பின்னர் மாலை 6 மணி அளவில் விஜயிடம் நடந்த விசாரணை நிறைவுபெற்றது. சி.பி.ஐ. அதிகாரிகள் 4 பேர் தமிழக வெற்றிக் கழக தலைவ் விஜயிடம் மட்டும் தனியாக விசாரணை நடத்தியதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.



பொதுப்பணித்துறையின் மூலம் சென்னை மாநில கல்லூரி வளாகத்தில் கட்டப்பட்டு வரும் முத்தமிழறிஞர் கலைஞர் அரங்க கட்டுமானப் பணிகளை, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேரில் பார்வையிட்டு பணிகளை விரைவாக முடிக்க அறிவுறுத்தினார். இந்த ஆய்வின் போது, பொதுப் பணித்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் மணிவண்ணன், சென்னை மண்டலத் தலைமைப் பொறியாளர் மணிகண்டன், தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்) மகாவிஷ்ணு, கண்காணிப்புப் பொறியாளர் கார்த்திகேயன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.